விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii




E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 222 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 13 செவ்வாய்க்கிழமை (29.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## அலங்காரக் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்



(யாழ்ப்பாணம்)
வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்த சுவாமி கோயிலின் கொடியேற்றம் இன்றாகும்.
15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் சர்வதேச மேற்பார்வையை உறுதி செய்க

### அரசிடம் சர்வதேச சட்டவல்லுநர்கள் குழு வலியுறுத்து

(கொழும்பு)
செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளில் சர்வதேச மேற்பார்வை மற்றும் நிபுணர்களின் ஈடுபாட்டை உறுதி செய்யுமாறு சர்வதேச சட்டவல்லுநர்கள் ஆணைக்குழு அநுர அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து விரிவான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள சர்வதேச சட்டவல்லுநர்கள் ஆணைக்குழு இந்த அகழ்வினை உண்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான ஒரு முக்கியமான படியாக விபரித்துள்ளது.

எனினும் அது சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கு
16ஆம் பக்கம் பார்க்க

# நாமல் ராஜபக்ஷவை உடன் கைது செய்க

### அம்பாந்தோட்டை நீதிமன்றம் உத்தரவு



(கொழும்பு)
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை உடனடியாகக் கைது செய்யுமாறு அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.
(15ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் கடற்படை தளபதி கைது



15ஆம் பக்கம் பார்க்க

### யாழ். வரவுள்ள


## அதிசொகுசு பயணிகள் கப்பல்

(யாழ்ப்பாணம்)
அதிசொகுசு சுற்றுலாப் பயணிகள் கப்பல் ஒன்று யாழ்ப்பாணம் வருகை தர
15ஆம் பக்கம் பார்க்க

## மனிதப் புதைகுழிகள் தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்


### செம்மணி அகழ்வைப் பார்வையிட்டபின் எம்.ஏ.சுமந்திரன்

(யாழ்ப்பாணம்)
உண்மைகளை மூடி மறைத்து இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்த முடியாது. எனவே புதைகுழிகள் தொடர்பிலான உண்மைகளை அரசாங்கம் கண்டறிந்து அதனை வெளிப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி சட்டத்
02ஆம் பக்கம் பார்க்க



### செம்மணி மனிதப் புதைகுழியில்

## 3 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் நேற்று அடையாளம்



(யாழ்ப்பாணம்)
செம்மணி மனிதப்புதைகுழியில் நேற்றுப் புதிதாக 3 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் 2ஆம் கட்டத்தின் 23ஆம் நாள்
15ஆம் பக்கம் பார்க்க

### மல்லாகத்தில் நடனமாடிய இளைஞன்

## பின்பக்கமாக நிலத்தில் அடிபட விழுந்ததில் மரணம்

(யாழ்ப்பாணம்)
பூப்புனித நீராட்டு விழாவில் நடனமாடிய இளைஞன் ஒருவர் பின்பக்கமாக நிலத்தில் அடிபட விழுந்ததில் உயிரிழந்துள்ளார்.

மல்லாகம் நரியிட்டால் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் பண்டத்தரிப்பு பல்லகட்டியைச் சேர்ந்த அன்னராசா அலக்சன் (வயது-19) என்ற
15ஆம் பக்கம் பார்க்க

## GovPay மூலம் அபராதம் செலுத்தலாம்



(கொழும்பு)
மேற்கு மாகாணத்திலும், அதிவேக நெடுஞ்சாலைகளிலும் நேற்று முதல் GovPay மூலம்
15ஆம் பக்கம் பார்க்க

## மேல் மாடியிலிருந்து தவறிவிழுந்தவர் மரணம்

### கிளிநொச்சி அறிவியல்நகரில் சம்பவம்

(கிளிநொச்சி)
மேல் மாடியில் இருந்து தவறிவிழுந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி அறிவியல் நகர் யாழ்பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி அறிவியல்
15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலனுக்கு மோ.சைக்கிள் வாங்க
# வீட்டில் நகைகளைக் களவாடிய யுவதி உட்பட 7 பேர் கைது
### சாவகச்சேரியில் சம்பவம்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரிக் ரொக் பிரபலங்களில் ஒருவரான தனது காதலனுக்கு மோட்டார் சைக்கிள் வாங்க வீட்டில் நகைகளைக் களவாடிய யுவதி உள்ளிட்ட ஏழு பேரை சாவகச்சேரி பொலிஸார் நேற்று திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் ரிக் ரொக் சமூக வலைத்தளங்களில் தனது காணொளிகளைப் பதிவேற்றி பிரபலமானவராகத் தன்னைக் காட்டிக்கொண்டு வந்துள்ளார்.

குறித்த இளைஞனுடன் ரிக் ரொக் மூலம் அறிமுகமான சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த யுவதி அவரைக் காதலித்து வந்துள்ளார்.

அந்நிலையில் தனது காதலனுக்கு அதிநவீன மோட்டார் சைக்கிள் ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்காகவும் காதலன் சொகுசு வாழ்க்கை வாழ்வதற்காவும் தனது வீட்டில் இருந்து சுமார் 19 பவுண் நகையைக் களவெடுத்து அதனைக் காதலனிடம் கொடுத்துள்ளார்.

வீட்டில் இருந்த நகைகள் காணாமல் போனமை தொடர்பில் யுவதியின் பெற்றோர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் யுவதி மீது சந்தேகம் கொண்டு அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்த போது வீட்டில் இருந்த நகைகளைத் தான் களவெடுத்து காதலனுக்கு வழங்கியதை ஒப்புக்கொண்டுள்ளார்.

யுவதியின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் காதலனைக் கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

அதன் அடிப்படையில் வீட்டில் நகைகளைக் களவெடுத்த யுவதி, அவரது காதலன் யுவதி வீட்டில் நகைகளைக் களவெடுப்பதற்கு உடந்தையாகச் செயற்பட்ட யுவதியின் நண்பி, நகைகளை விற்க உதவியவர்கள், நகைகளை வாங்கியவர்கள் என ஏழு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஏழு நபர்களையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,33)

## சிவகுரு ஆதீனத்தில்
# நல்லூர் உற்சவகால சிறப்பு அருளுரை

(நல்லூர்)

சிவகுரு ஆதீனத்தினால் நல்லைக் கந்தப் பெருமான் மகோற்சவ காலத்தில் நடாத்தப்படுகின்ற தொடர் அருளுரையானது வழமை போல இம்முறையும் கொடியேற்றத் தினமான இன்று செவ்வாய்க்கிழமை முதல் தீர்த்தோற்சவ தினமான 22.08.2025 வெள்ளிக்கிழமை வரை தினமும் இரவு 08.00 மணி முதல் 08.30 மணிவரை சிவகுரு ஆதீன மண்டபத்தில் தவத்திரு வேலன் சுவாமிகளால் ஆற்றப்படும்.

அந்த வகையில் இன்று "பற்றினை அறுக்கப் பாடுபடுவோம்" எனும் தலைப்பிலும் நாளை புதன்கிழமை "எனை ஆண்ட இடம்" என்ற தலைப்பிலும் அருளுரைகள் இடம்பெறும். (ம - 7)

## அத்தியாவசிய மருந்துகளுக்கு
# பற்றாக்குறை இல்லை
### சுகாதார அமைச்சு

(கொழும்பு)

நாட்டில் மிகவும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்குப்பற்றாக்குறை இல்லை எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் கலந்துரையாடலின் போதே சுகாதார அமைச்சின் அதிகாரிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த வருடங்களில் கொள்முதல் நடவடிக்கையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக தற்போதைய மருந்துப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

எனினும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை.

இந்தநிலையில் எதிர்வரும் 2026 ஆம் ஆண்டிற்கான கொள்முதல் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மருந்துப் பற்றாக்குறை விரைவில் நிவர்த்திக்கப்படும் என்றனர்.

அத்துடன் இந்த ஆண்டு இறுதிக்குள் நாட்டில் 80 முதல் 90 சதவீதமான அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் கிடைக்கும் எனச் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-7)

# இலங்கை - மாலைதீவு இடையே
## புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



இலங்கை - மாலைதீவு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

மாலைதீவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும், மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சுவிற்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நேற்று (28) பிற்பகல் மாலைதீவு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றன.

மாலைதீவு ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு, மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சு மகத்தான வரவேற்பளித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விருந்தினர் புத்தகத்தில் நினைவுக் குறிப்பு இட்ட பிறகு, இரு நாடுகளின் தலைவர்களும் உத்தியோக பூர்வ புகைப்படம் பிடிக்கும் நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

அதன் பின்னர், ஜனாதிபதிக்கும் மாலைதீவு ஜனாதிபதிக்கும் இடையிலான இரு தரப்புப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

கலந்துரையாடலைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

அதன்படி, மாலைதீவு வெளியுறவு சேவை நிறுவனம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் பரஸ்பர சட்ட உதவி வழங்கல் தொடர்பான ஒப்பந்தம் என்பன பரிமாறப்பட்டன.

இந்த ஒப்பந்தங்கள் மாலைதீவு மற்றும் இலங்கை இடையே பல்வேறு துறைகளிலான உறவுகளையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்த உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குற்றங்களைக் கையாள்வதில் பரஸ்பர சட்ட உதவி வழங்குவதை முதலாவது ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இரண்டாவது ஒப்பந்தம் இரு நிறுவனங்களுக்கும் இடையில் இராஜதந்திர பயிற்சி அளிப்பது மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு இடையே தகவல் மற்றும் ஆவணங்களைப் பரிமாறிக்கொள்வது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தமாகும்.

இந்த ஒப்பந்தங்களை மாலைதீவு சார்பில் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் கலாநிதி அப்துல்லா கலீல் மற்றும் இலங்கை சார்பில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் பரிமாறிக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சு ஆகியோர் மாலைதீவுக்கான அரச விஜயம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டனர். (ம-7)

## மனிதப் ...

தரணி எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

செம்மணிப் புதைகுழி அகழ்வுப் பணிகளை நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கேசவன் சயந்தன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சுமந்திரன் இங்கு நடைபெறும் அகழ்வுப் பணிகளில் குழந்தைகள், வயது குறைந்தவர்களின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. எலும்புகூடுகள் அசாதாரணமான சூழலில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இவை தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்.

மனிதப் புதைகுழிகள் கொக்குத்தொடுவாய், மன்னார், மாத்தளை போன்று தெற்கிலும் சில இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இலங்கையில் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும் அவை தொடர்பில் ஆய்வு செய்ய கூடிய பொறிமுறைகள் இலங்கையில் இன்னமும் இல்லாத நிலைமைகள் காணப்படுகின்றன. எனவே சர்வதேச நிபுணத்துவ உதவிகளை இலங்கை பெற்றுக்கொள்ள வேண்டும். அகழ்ந்து எடுக்கப்படும் எலும்புக்கூடுகளை முறையாகப் பாதுகாப்பதற்கு கூட சர்வதேச நிபுணத்துவ மேற்பார்வை வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

இந்த அரசாங்கம் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதாகக் கூறுகிறது. உண்மைகளை மறைத்து நல்லிணக்கத்தினை ஏற்படுத்த முடியாது எனவே புதைகுழிகள் தொடர்பிலான உண்மைகளை கண்டறிய சர்வதேச நிபுணர்களை நாட்டுக்கு அழைத்து அவர்களிடம் புதைகுழி விவகாரங்களைக் கையளித்து எவ்வித தலையீடுகளும் இன்றி அவர்கள் சுயாதீனமாகச் செயற்பட்டு, அது தொடர்பிலான உண்மைகளை வெளிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் மக்கள் தொகை குறைந்து வருகிறது

# நாம் இருவர் நமக்கு நால்வர் என்ற குடும்ப வாழ்வை வலியுறுத்த வேண்டும்

### வைத்திய நிபுணர் செல்வலிங்கம் தெய்வகுமார் கருத்து



(மண்டைதீவு)

எமது மக்கள் தொகை கடுமையாகக் குறைந்து வருகிறது. இதுபற்றி நாம் இப்போது சிந்திப்பது அவசியம். நாம் இருவர் நமக்கு நால்வர் என்ற இலக்குடன் கூடிய இல்வாழ்வை வலியுறுத்த வேண்டும். இவ்வாறு இலண்டன் நோத் வெஸ்ட் யுனிவெர்சிற்றி கொஸ்பிற்றல் வைத்திய நிபுணர் செல்வலிங்கம் தெய்வகுமார் தெரிவித்தார்.

மண்டைதீவு கல்வி வளர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டில், பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி மண்டைதீவு மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வைத்திய நிபுணர் செல்வலிங்கம் தெய்வகுமார் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், எமது மக்கள் தொகை கணிசமாகக் குறைந்து வருகிறது. பாடசாலைகள் குறைந்த மாணவர்களுடன் இயங்குகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மாணவர்கள் இல்லாத காரணத்தால் பாடசாலைகள் மூடப்படுகின்றன.

இங்குதான் எங்கள் மக்கள் தொகை பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

எமது மக்கள் தொகை கணிசமாகக் குறைந்து செல்வதென்பது எம் எதிர்காலத்திற்கு ஆரோக்கியமானதல்ல.

எனவே குழந்தைப் பேற்றை ஊக்குவிக்க வேண்டும்.

நாம் இருவர் நமக்கு நால்வர் என்ற இலக்கை நம் சிந்தனையில் வைத்திருக்க வேண்டும். அதை ஒரு பிரசாரமாக மேற்கொள்ள வேண்டும்.

ஒரு காலத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்த போது நாம் இருவர் நமக்கு இருவர் என்றார்கள். பின்னர் நாம் இருவர் நமக்கு எதற்கு இன்னொருவர் என்றனர்.

ஆனால் இன்றைய நிலைமை அதுவல்ல. எமது மக்கள் தொகை கடுமையாகக் குறைந்து விட்டது.

குறைந்து செல்கின்ற எமது மக்கள் தொகை குறித்து நாம் கவலைப்படாமல் இருந்து விட முடியாது.

அது பற்றி மற்றவர்கள் சிந்திப்பார்கள் என நாம் எதிர்பார்க்கவும் முடியாது.

எனவே இல்வாழ்வில் இணைகின்றவர்கள் குறைந்தது நான்கு பிள்ளைகளையேனும் பெற்று வளர்க்க வேண்டும் என்றார்.

மண்டைதீவு கல்வி வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் கலாநிதி செ.சேதுராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நிகழ்ச்சிகளை ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் சி.ஞானசேகரம் நெறிப்படுத்த, கிளிநொச்சி மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் ச.மோகனபவன் வரவேற்புரையையும் மண்டைதீவு மகாவித்தியாலய அதிபர் சி. இளங்கோ கௌரவ விருந்தினர் உரையையும் ஆற்ற, கல்வி வளர்ச்சிக் கழகத்தின் செயலாளர் மு.இராஜகோபால் நன்றியுரையையும் வழங்கினார். (ந)




## பொரளையில் விபத்து

### ஒருவர் உயிரிழப்பு பலர் காயம்



(கொழும்பு)

பொரளை, கனத்தைச் சந்தி பகுதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட பயங்கர வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும், இந்த விபத்தில் ஐந்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேக்குகள் சரியாக வேலை செய்யாத கிரேன் லொறி ஒன்று பல வாகனங்கள் மீது மோதியதால் இந்த விபத்து நிகழ்ந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சாரதி போதைப்பொருள் பாவித்திருந்தமை உறுதிப்பட்ட நிலையில்பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (நி)

## எரிபொருள் நுகர்வில் வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டில் எரிபொருள் நுகர்வு சுமார் 30 சதவீதம் குறைந்துள்ளதாக வலுசக்தி அமைச்சர் குமாரஜயகொடி தெரிவித்துள்ளார். மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்

மேலும், புதிய பெற்றோல் நிலையங்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மின்சார உற்பத்திக்குப் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அதிகளவில் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் 70 சதவீத மின்சாரத்தை 2030 ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களிலிருந்து பெறுவதற்கு அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக சூரிய, காற்று, நீர் மற்றும் உயிரி ஆற்றல் வளங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும் வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# உலக வலுதூக்கல் போட்டியில் யாழ். வீராங்கனைகள் சாதனை






12 ஆவது உலக வலுதூக்கல் போட்டியில் யாழ். மாணவிகள் தங்கம், வெள்ளி மற்றும் வெண் கலப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

அண்மையில் தாய்லாந்து நாட்டில் இடம்பெற்ற உலக வலுதூக்கல் போட்டியில் 17 நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். இப் போட்டியில் இலங்கை சார்பில் 14 பேர் கலந்துகொண்டிருந்ததுடன், யாழ். மாவட்டத்திலிந்து 3 பெண் வீராங்கனைகள் பங்கு பற்றியிருந்தனர்.

23 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் 65 கிலோ எடைப் பிரிவில் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவியான சி.புளோரிஸ்ரா 2 தங்கப் பதக்கங்களையும், 85 கிலோ எடைப் பிரிவில் சென் ஜேம்ஸ் கல்லூரியின் ஜ.ஜெகனிகா 2 வெள்ளிப் பதக்கங்களையும், சிரேஷ்ட மாணவப் பிரிவில் 80 கிலோ எடைப் பிரிவில் வி.ஆஷிகா வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## “ஆல் ஏரியாவிலும் ஐயா கில்லிடா”

# இங்கிலாந்து மண்ணிலும் சாதனை படைத்த ஜடேஜா



இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதிய 4 ஆவது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் உள்ள ஓல்ட் டிராபோர்ட் மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதலில் ஆடிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 358 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதைத் தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 669 ஓட்டங்களைப் பெற்றது.

311 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்சில் விளையாடிய இந்திய அணி இறுதியில் 4 விக்கெட்டுக்கு 425 ஓட்டங்கள் குவித்தது. ஜடேஜா 107 ஓட்டங்களும், வாஷிங்டன் சுந்தர் 101 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதையடுத்து போட்டி சமநிலையில் முடிந்தது. ஆனாலும் தொடரில் 2-1 என இங்கிலாந்து முன்னிலை வகிக்கிறது.

இப்போட்டியில் 2 ஆவது இன்னிங்சில் சதம் அடித்து அசத்திய ஜடேஜா 1 விக்கெட்டுகளும் வீழ்த்தினார். இதன்மூலம் இங்கிலாந்தில் நடந்த டெஸ்ட் போட்டிகளில் 1000 இற்கு மேல் ஓட்டங்கள் மற்றும் 30 இற்கு மேல் விக்கெட்கள் எடுத்த ஒரே இந்திய வீரர் என்ற சாதனையை ஜடேஜா படைத்துள்ளார். (3)

## வோஷிங்டன் ஓபன் டெனிஸ்

# ஆண்கள் இரட்டையர் பிரிவில் இத்தாலி ஜோடிக்கு சம்பியன்



வோஷிங்டன் ஓபன் டெனிஸ் தொடர் அமெரிக்காவின் வோஷிங்டன் டி.சி.யில் நடைபெற்றது. இதில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் இத்தாலியின் சைமோன் பொலேலி-ஆண்ட்ரியா வவசோரி ஜோடி, மொனாக்கோவின் ஹியூகோ நைஸ்-பிரான்சின் ரோஜர் வாஸ்லின் ஜோடி உடன் மோதியது. இதில் தொடக்கம் முதலே அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இத்தாலியின் சைமோன் பொலேலி-ஆண்ட்ரியா வவசோரி ஜோடி 6-3, 6-4 என்ற செட் கணக்கில் எளிதில் வென்று சம்பியன் பட்டம் வென்று அசத்தியது. (3)

# இங்கிலாந்துக்கு எதிரான இறுதி டெஸ்ட்; இந்திய வீரர் ரிஷப் பண்ட் விலகல்

இங்கிலாந்துக்கு எதிரான 5 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ரிஷப் பண்டுக்கு மாற்றாக தமிழக வீரர் ஜெகதீசன் இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. 2 - 1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி முன்னிலை வகிக்கும் நிலையில், மான்செஸ்டரில் இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதிய 4 ஆவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது.

இந்த போட்டியில் கிறிஸ்வோக்ஸ் வீசிய யார்க்கர் பந்தில் ரிஷப் பண்ட் காயமடைந்தார். காலில் ஏற்பட்ட எலும்பு முறிவால் இங்கிலாந்துக்கு எதிரான 5 ஆவது டெஸ்ட் போட்டியில் இருந்து ரிஷப் பண்ட் விலகியுள்ளார். மேலும், ரிஷப் பண்ட் ஆறு வாரங்கள் வரை ஓய்வில் இருக்க மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. அதைத் தொடர்ந்து ரிஷப் பண்டுக்கு பதிலாக தமிழ் நாட்டைச் சேர்ந்த விக்கெட் கீப்பரும், துடுப்பாட்ட வீரருமான ஜெகதீசன் அணியில் சேர்க்கப் பட்டுள்ளார். (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் இனி இரண்டு இடைவேளை

## வருகிறது புதிய திட்டம்

(கொழும்பு)
புதிய கல்வி சீர்திருத்தங்களின் படி, பாடசாலை நேரங்கள் மற்றும் இடைவேளை நேரங்கள் குறித்த புதிய தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த தகவலை தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் அசோக டி சில்வா வெளியிட்டுள்ளார்.

அதன்படி, பாடசாலை காலை 7.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை நடைபெறும் என்றும் இரண்டு இடைவேளை நேரங்களை வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனவரி முதலாம் திகதி முதல் பாடசாலை நேரம் நாள் ஒன்றிற்கு 50 நிமிடங்கள் அதிகரிக்கும் என்பதால், மாணவர்களால் அதைத் தாங்க முடியாது, எனவே தினமும் காலை 10.10 மணி முதல் காலை 10.30 மணி வரை மற்றும் மதியம் 12.10 மணி முதல் மதியம் 12.20 மணி வரை இரண்டு இடைவேளை நேரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, காலை 7.40 முதல் 8.30 மணி வரை, காலை 8.30-9.20 மணிவரை, காலை 9.20 -10.10 மணி வரை, காலை 10.30 -11.20 மணி வரை, காலை 11.20 முதல் மதியம் 12.10 மணி வரை மற்றும் மதியம் 12.20 - 1.10 மணி வரை, பிற்பகல் 1.10- 2 மணி வரை என வகுப்பு நேரங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-8)

# 48 மணிநேர அவகாசம் இல்லையேல் போராட்டம்

## ரயில்வே சாரதிகள் சங்கம்

(கொழும்பு)
ரயில்வே சாரதிகளுக்கான பிரச்சினைகளுக்குத் தீர்வு தரப்படாவிட்டால் 48 மணி நேர அடையாள வேலைநிறுத்தத்தைத் தொடங்குவோம் என்று ரயில்வே சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

2025 ஜூலை 22, அன்று போக்குவரத்து அமைச்சு மற்றும் ரயில்வே திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக நேர்மறையான பதில் கிடைக்கவில்லை என்றால், ஜூலை 30 மற்றும் 31 ஆகிய திகதிகளில் வேலை நிறுத்தம் நடத்தப்படும் என்று சங்கத்தின் பொதுத் தலைவர் கே.யு. கோந்தசிங்க குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக ரயில் சாரதிகள் சங்கம் எதிர்கொள்ளும் நிர்வாகப் பிரச்சினைகள் மற்றும் உட்கட்டமைப்பு தொடர்பாக, ஒரு தீர்க்கமான தீர்வு காணப்படாவிட்டால், இந்த வேலை நிறுத்தம் தவிர்க்க முடியாமல் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (க-8)

# மேலதிக நிமிடங்களுக்கு மேலதிக சம்பளம் வேண்டும்

## ஆசிரியர்கள் கோரிக்கை

(கொழும்பு)
அரசாங்கம் பாடசாலை நேரத்தை 30 நிமிடங்கள் நீடிக்க நடவடிக்கை எடுத்தால், அது ஆசிரியர்களுக்கு மேலதிக கடமைகள் மற்றும் பொறுப்புகளை ஏற்படுத்தும் என்றும், அதற்கேற்ப சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் இலங்கை சுயாதீன ஆசிரியர் சேவை சங்கம் வலியுறுத்துகிறது.

இந்த முன்மொழிவு குறித்து கருத்து தெரிவித்த சங்கத்தின் பொதுச் செயலாளர் சந்திமால் விஜேரத்ன, 30 நிமிடங்கள் நீட்டிப்பது மாதாந்திர சேவைக் காலமான 20 நாட்களில் 10 மேலதிக சேவை நேரங்களைச் சேர்க்கும். இது ஆசிரியர்களின் சம்பளத்தை நேரடியாகப் பாதிக்கும் ஒரு போக்கு.

தொடர்புடைய முன் மொழியப்பட்ட திட்டம் கற்பித்தல் நேரத்தை நீட்டித்தாலும், ஆசிரியர்களின் சம்பளம் நியாயமான முறையில் அதிகரிக்கப்பட வேண்டும்.

கல்வி அமைச்சகம் ஆசிரியர்களின் தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசித்து அதை செயற்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (நி)


சிவமயம்

## ஓராண்டு நினைவு தின அழைப்பிதழ்

தோற்றம் 12 . 03 . 1962



மறைவு 09 . 08 . 2024

கடந்த வருடம் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதியன்று இறைபதம் அடைந்த எமது அன்புக் குடும்பத் தலைவி

அமரர். திருமதி. சாந்தினி திருவாதவூரன்

[திதி- ஆடி மாதம் பூர்வ பக்க கருட பஞ்சமி]

"புன்னகை பூத்த முகம் பரிதலாற் கனிந்த மனம்
கன்னலென இனிக்கும் கவினுடைய பேச்சு
இன்னலென்று புரியாத இறைவன் திருவிளையாடல்
அன்னை சாந்தினி ஆத்மா பறந்து ஆண்டொன்றும் ஆனதுவோ"

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று 29.07.2025 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி அளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளமையால் அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(1377)

"விக்கினேஸ்வரி பவனம்"
210, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம் வடக்கு, சுன்னாகம்.

மார்க்கண்டு திருவாதவூரன்
குடும்பத்தினர்.



# இராசிபலன்

29.07.2025
ஆடி 13, செவ்வாய்க்கிழமை
பஞ்சமி பின்னிரவு 2.21 மணிவரை
உத்தரம் முன்னிரவு 9.41 மணிவரை


சுப நேரம் 10.33-12.03 மணிவரை
இராகுகாலம் 3.03-4.33 மணிவரை
அமிர்தசித்தம், கந்த பஞ்சம்
நல்லூர்க் கந்தன் கொடியேற்றம்

சந்திராஷ்டமம்:
அவிட்டம், சதயம்

வளவன்





சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு, மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள்.





பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.




பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.





புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.




விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புதிய அனுபவங்கள் ஏற்படலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.





தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பணப்புழக்கம் அதிகமானாலும் விரயங்களும் மேலோங்கும் நாள், வழிபாட்டால் முன்னேற்றம் காணும் நாள்.




புதிய பொருட்சேர்க்கையுண்டு, குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் கௌரவம் கூடும்.




தொழில் வளர்ச்சி கூடும், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், குடும்ப ஒற்றுமை கூடும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பொது வாழ்வில் கௌரவம் கூடும்.




வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.




குடும்பப் பொறுப்புக்கள் கூடும், நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், ரோக பயமுண்டு.




உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

வெற்றி என்பது விழாமல் இருப்பதல்ல வீழ்ந்த பின் எழுவதேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள்
### பவ்ரல் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

நீண்டகாலமாக நடத்தப்படாமலிருக்கின்ற மாகாணசபை தேர்தலை அரசாங்கம் உடனடியாக நடத்தவேண்டும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போதைய மாகாணசபைகளின் ஆயுள்காலம் 2014 செப்டெம்பருடன் முடிவடைந்து விட்டதை பவ்ரல் தனது அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளது. ஆனால் பல காரணங்களிற்காக அரசாங்கங்கள் இதனை நடைமுறைப்படுத்த வில்லை, பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ள போதிலும் தேர்தலை நடத்துவதற்கான சட்ட நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என பவ்ரல் சுட்டிக்காட்டியுள்ளது.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் ஏற்பட்ட தாமதங்கள் மக்கள் மத்தியிலும் சிவில் சமூகத்தினர் மத்தியிலும் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளன, என தெரிவித்துள்ள பவ்ரல் இவ்வாறு தேர்தலை ஒத்திவைப்பது பிற்போடுவது ஜனநாயக கொள்கைகளை, சட்டத்தின் ஆட்சியை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும் அமையும் அத்துடன் தேர்தல்களை நடத்தாமலிருப்பது அரசியலமைப்பு ஏற்பாடுகளை ஜனநாயக மரபுகளை மீறும் செயல் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளது. (க-8)

# பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 431 (3) இன் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் இலக்கங்களைக் கொண்ட வழக்குகளில் உள்ள சான்றுப் பொருள்களான மோட்டார் சைக்கிள்களை அதன் உரிமையாளர் தகுந்த அடையாளத்தை உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளுமாறும் அவ்வாறு உரிமை கோரப்படாத விடத்து 2 மாதங்களின் பின் எவ்விதமான முன் அறிவித்தல்களும் வழங்கப்படாது சான்றுப்பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படுமென முல்லைத் தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (3)

| வழக்கு இல | சான்றுப்பொருள் | வாகன இலக்கம் | மறுதவணை |
|---|---|---|---|
| 42827 | மோட்டார் சைக்கிள் | NP BHW 5321 | |
| 45682 | மோட்டார் சைக்கிள் | NP BCR 8154 | |
| 45758 | மோட்டார் சைக்கிள் | NP HW 3748 | |
| 43899 | மோட்டார் சைக்கிள் | NP WE 8708 | 11.08.2025 |
| 48268 | மோட்டார் சைக்கிள் | EP JH 3472 | |
| 45141 | மோட்டார் சைக்கிள் | NP BDO 8469 | |
| 51439 | மோட்டார் சைக்கிள் | NP BBX 8057 | |
| 44911 | மோட்டார் சைக்கிள் | EP WA 4682 | |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 250 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 250 | 400 | 300 | 300 |
| தக்காளி | 200 | 200 | 250 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 300 | 280 |
| கோவா | 300 | 350 | 400 | 250 | 400 |
| கரட் | 350 | 400 | 450 | 350 | 400 |
| பூசணி | 100 | 140 | 120 | 100 | 100 |
| புடோல் | 80 | 100 | 150 | 100 | 150 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 350 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 300 | 450 | 450 | 500 | 600 |
| வெண்டக்காய் | 150 | 100 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 320 | 250 | 280 | 400 |
| பயற்றங்காய் | 300 | 300 | 300 | 300 | 200 |
| லீக்ஸ் | 320 | 300 | 350 | 250 | 300 |
| பீற்றூட் | 120 | 150 | 250 | 140 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 550 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 450 | 500 | 350 | 600 |
| போஞ்சி | 400 | 750 | 500 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 160 | 250 | -- | 200 |
| கீரை – 1 பிடி | 60 | 60-120 | 150 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 100 | 200 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 170 | 150 | 80-140 | 140-180 |
| இராசவள்ளி | 600 | 650 | 500 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 500 | 250 | 400 |
| முள்ளங்கி | 150 | 150 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 80 | 200 |

## க.பொ.த சாதாரண தர இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சட்டத்தரணி வேலாயுதன் தேவசேனாதிபதி கொழும்பு அருள் கல்வி வட்டத்தின் ஒழுங்குபடுத்தலில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை தினமும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி- ஊர்காவற்றுறை பிரதேச செயலகம், 7 ஆம் திகதி- வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி, 8 ஆம் திகதி- யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் (பெண்கள் பாடசாலை மாணவர்கள் மட்டும்), 9 ஆம் திகதி- யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்(ஆண்கள் பாடசாலை மாணவர்கள் மட்டும்), 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்(கலவன் பாடசாலை மாணவர்கள் மட்டும்), 11 ஆம் திகதி- மன்னார் நகராட்சி சபை மண்டபம் (மன்னார் மற்றும் மடு மாணவர்கள்), 12 ஆம் திகதி- கிளிநொச்சி கூட்டுறவு சமூக மண்டபம்(கிளிநொச்சி தெற்கு மாணவர்கள்),13 ஆம் திகதி கிளிநொச்சி கூட்டுறவு சமூக மண்டபம்(கிளிநொச்சி வடக்கு மற்றும் துணுக்காய் மாணவர்கள்), 14 ஆம் திகதி- முல்லைத் தீவு ஊற்றக்கரை பிள்ளையார் கோவில் மண்டபம், 15 ஆம் திகதி-வவுனியா நகராட்சி சபை மண்டபம் ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளன.

அத்துடன் கருத்தரங்கில் பங்குபற்றும் மாணவர்களுக்கு கையேடுகள் மற்றும் கடந்த கால வினா விடைத் தொகுப்பு புத்தகங்கள் என்பன இலவசமாக வழங்கப்படுமென செயலமர்வின் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (3)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பெருங்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை காலை 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் இடம்பெறவுள்ளன.

இம் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 10 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று இரவு 7 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று மறுநாள் ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு பூங்காவன உற்சவத்துடன் நிறைவடையவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (3)




## கா! நல்லைக் குமரேசனே!

முந்துதமிழ்ச் சிந்துநதி ராடிவிளை யாடிவரும்
மூத்ததிரு நல்லைப்பதியில்
கந்தன்கொடி யேறவொரு கருவிருளும் கருகிவிடும்
கருணையினைப் பொழியவருவான்
வந்தவினை சொந்தவினை எந்தவினை யுமநீக்கி
விந்தையுடன் முந்தியொளிர்வான்
இந்தமுரு கேசனரு ளெங்கும்நிறைந் தாளும்பொருள்
எழில்நல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிர்.நவ.பாலகோபால்.

## கொடியேற்றி நம் மக்களுக்கொரு தீர்வைப் பெற்றுத் தா வேலவா!

நல்லையில் வீற்றிருந்து நல்லாட்சி புரியும் வேலவா!
அடியவர்க்கு அருள்மழை பொழியும் ஆறுமுக வேலவா!
அலங்காரக் கந்தனே அன்புவடிவானவனே!
பரமனுக்கு உபதேசம் செய்த பாலகுமாரா!
கொடியேற்றம் காண உன்தன் வாயில் வந்தோம் வேலவா!
கொடியேற்றி நம்மக்களுக்காக தீர்வைப் பெற்றுத் தா வேலவா.

நயினை விசு
இராசநாயகம்.

## பக்தியுடன் கொடியேற்றம் காண்பதற்கு

கோடி அணிந்து கீர்த்தியுடன் வாழ்வோரும்
குடிசையில் மிடிமையில் உள்ளாரும்
தேடிடும் தேவைக்காய் தினமும் அலைவோரும்
தனிமைத் துயரில் தவிப்போரும்
நாடியே வருகின்றார் நல்லூர்க் கந்தன்
கொடியேற்றம் காண்பதற்குப் பக்தியுடன்
வாடிவரும் அடியார்கள் வாட்டத்தை நீக்கிட
வடிவேலன் கருணை காட்டிடுவார்

குளப்பிட்டி,
க.அருமைநாயகம்.

## வேல்தாங்கி,சேவற் கொடி தாங்கி கந்தவேளே வருக...!!!

நீலவுலகம் உய்வுபெற நீயன்று அவதரித்தே
நீதியினைச் சாற்றினாய் முருகப்பெருமானே!
பலவடிவில் சூழ்ந்த பெரும் இன்னலுக்குள் நாமுழன்று
கலங்கிடும் போதின்று நீயில்லை!
உழைந்து பல மக்களிங்கு உயிரற்று வீழ்ந்திடவும்
விதியென விட்டனை நல்லூரானே!
சிலையென நீயிங்கு இருந்திடம் முறையோவுன்
சீர்செய்யும் வெற்றிவேல் எங்கே!
தலைமுறையால் ஈழத்துத் தமிழர்க்கு இனியேனும்
குற்றமிலாப் பூமிதனைக் காட்டிடுவாய்!

இரா.தில்லைராஜன்

## பாவம் களைவது நல்லூர்

அதிரவரும் இயமனும் அடங்கி ஒடுங்கும் அதிசய
ஆலயம் நல்லூராகும்,
அலைகடலெனத் திரண்டுவரும் அடியவர்கள்
பரவசமாகும் ஆலயம் நல்லூராகும்,
எதிரிகள் கூட தாம் செய்த பாவங்களைக் கண்ணீரால்
இறக்கிக் காலியாக்குவது நல்லூராகும்,
எல்லோரும் சமன் என்று எடுத்தியம்பும் அலங்காரப்
பொற்கோவில் நல்லூராகும்.

கே.எஸ்.சிவஞானராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தினூடே நீதியைப் பெற்றுத் தருவதில் இலங்கை அரசின் செயற்பாடு அச்சத்திற்குரியது

## பிரித்தானிய தமிழர் பேரவை சுட்டிக்காட்டு

**(கொழும்பு) ...............................**
**சர்வதேசத்தின் நீதியைத் தடம்புரளச் செய்வதற்கான இலங்கை அரசின் முயற்சிகள் குறித்து தமிழ் மக்கள் அச்சமடைந்துள்ளனர். எனவே மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகள், சர்வதேச நீதிக்கான செயற்பாடுகளை முழுமையாகப் பொறுப் பேற்க வேண்டும் என பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.**

சமூக ஊடகப் பதிவிலேயே பிரித்தானிய தமிழர் பேரவை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டமைக்காக நாங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

சர்வதேச நீதியைத் தடம்புரளச்செய்வதற்காக இலங்கை அரசாங்கம் உள்நாட்டு பொறிமுறை - கலப்பு பொறிமுறை மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகியவற்றை பயன்படுத்த முயல்வது குறித்து பாதிக்கப்பட்ட தமிழர்கள் கலக்கமடைந்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகள். இந்த முட்டுக்கட்டை தந்திரோபாயங்களை நிராகரிக்க வேண்டும், இந்த போலி நாடகத்தை அம்பலப்படுத்த வேண்டும், சர்வதேச நீதி செயற்பாடுகளை முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும்.

இலங்கைக பொறுப்புக்கூறல் திட்டம் தொடரும் வன்முறைகள் குறித்தும் 1948 முதல் இடம்பெற்ற இனப்படுகொலைகள் குறித்தும் அறிக்கையிடுதல் வேண்டும் எனச் சுட்டிக்காட்டியுள்ளது. (க-8)

# மாணவர்களிடையே அதிக போதைப்பொருள் பாவனை தடுப்பதற்கு பாடசாலைகளில் விசேட குழு

(கொழும்பு)

மாணவர்களிடையே அதிகரித்து வரும் போதைப் பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்கு பாட சாலை மட்டத்தில் குழுக்களை நிறுவுவதற்குப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவிக்கையில், பாடசாலை மாணவர்களிடையே தற்போது போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. இதனைத் தடுப்பது மிக முக்கியமானதொன்றாகும்.

எனவே போதைப்பொருள் பாவனையை மாணவர்களிடையே தடுக்கும் செயற்றிட்டத்தை அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையுடன் இணைந்து முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

1080 பாடசாலைகளில் ஏற்கனவே இதுபோன்ற குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுவிலும் பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் பிரதிநிதி ஆகியோர் அடங்குவர்.

25 மாவட்டங்களிலும் உள்ள பாடசாலைகளில், போதைப்பொருள் பரவுவதைத் தடுப்பதே இந்த முயற்சியின் நோக்கமாகும் என்று பொது மக்கள் பாதுகாப்பு பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)


லங்கா மஹறால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(1379)

UK-1350, Australia-2050, Canada-2550,
India-1490, Germany-1990, Italy-2250,
Swiss-2480, France-2180

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை
எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா,
மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
தொடர்புகளுக்கு
077 839 3974, 076 889 1308


# சொத்துக் குவிப்பு வழக்குகள் ஒத்திவைத்தது நீதிமன்றம்

(கொழும்பு)

சட்டவிரோதமாக சம்பாதித்ததாகக் கூறப்படும் 73 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்கள் தொடர்பில் யோஷித்த ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு மீதான விசாரணையை எதிர்வரும் செப்ரெம்பர் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது கொழும்பு மேல் நீதிமன்றம். பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் யோஷித்த ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெ ஸ்ட் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபரால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று திங்கட்கிழமை கொழும்பு மேல்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (க-8)

••••••••••••••••••••••••••••••••••••••••

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுததுக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சஹான் மாபா பண்டார முன்னிலையில் விசாரணைக்கு வந்த போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2010-2012 ஆம் ஆண்டுகளில் அமைச்சராகப் பணியாற்றிய போது, தனது சட்டபூர்வமான வருமானத்தைவிட அதிகமாக, 150 மில்லியன் ரூபாய் மதிப்புக்க சொத்துக்களை மேர்வின் சில்வா சட்டவிரோதமாகச் சம்பாதித்ததன் மூலம் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு வழக்குத் தொடர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# மாலைதீவில் அநுரவுக்கு அமோக வரவேற்பு

மாலைதீவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று மாலைதீவின் வெலானா சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தார்.

அங்கு மாலைதீவின் தேசிய பாதுகாப்புப் படையின் மரியாதைக்கு மத்தியில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை அந்நாட்டு ஜனாதிபதி கலாநிதி மொஹமட் முய்சு வரவேற்றார்.

ஜனாதிபதியை வரவேற்கும் முகமாக மாலைதீவு வெலானா சர்வதேச விமான நிலையத்தின் விசேட விருந்தினர் வருகை முனையத்தில் சிறுமிகள் குழுவொன்று அழகிய கலாசார நடனத்தை நிகழ்த்தியதுடன், ஜனாதிபதி அந்தச் சிறுமிகளுடன் சிறு உரையாடலிலும் ஈடுபட்டார். (க-8)

# தரம் 09 மாணவர்களுக்கான மகாஜனன் கணித விஞ்ஞான திறன்காண் போட்டிப் பரீட்சை - 2025

யா/மகாஜனக் கல்லூரி முன்னாள் ஆசிரியை அமரர். சௌபாக்கியவதி இராஜரட்ணம் மற்றும் அமரர். பத்மபாஷினி செல்வஸ்கந்தன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக, சட்டத்தரணி இ. செல்வஸ்கந்தன் (மகாஜனன்) அவர்களால் வருடாவருடம் தரம் 9 மாணவர்களுக்காக நடத்தப்படும் மேற்படி பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி நடத்தப்பட இருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இதற்கான விண்ணப்பங்கள் யாவும் மாணவர் முழுப்பெயர் (ஆங்கிலத்தில்), பிறந்ததிகதி, தொலைபேசி இலக்கம் உள்ள டங்கலாக அதிபரின் உறுதிப்படுத்தலுடன் 15.09.2025 இற்கு முன்னராக **அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை** எனும் முக வரிக்கு அல்லது **mahajananquiz@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இம்முறை அமரர். சௌபாக்கியவதி அவர்களின் நூற்றாண்டு விழா என்பதால் பரிசளிப்பு நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

**பரீட்சை நிலையங்கள்**

1. வவுனியா - வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்
2. கிளிநொச்சி, முல்லைத்தீவு - கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி
3. மன்னார் - மன்/ சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி
4. தென்மராட்சி- யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
5. வடமராட்சி- யா/ஹாட்லிக் கல்லூரி
6. யாழ்ப்பாணம்- யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
7. வலிகாமம் - யா/ இராமநாதன் கல்லூரி, யா/மகாஜனக் கல்லூரி

**பரிசில் விபரம்**

| | |
|---|---|
| 1 ஆம் இடம் - 40,000/= | 4,5,6ஆம் இடம் - 15,000/= |
| 2 ஆம் இடம் - 30,000/= | 7,8,9,10 ஆம் - 10,000/= |
| 3 ஆம் இடம் - 20, 000/= | ஆறுதல் பரிசு - 7,500/= |

**தகவல்- அதிபர்**

(சி-3513)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிகிறார் ட்ரம்ப் தணிகிறது வரி

(வோஷிங்டன்)

ஐரோப்பிய ஒன்றியத்துடன் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இறக்குமதி பொருட்கள் மீதான வரி 15 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்ற முதல்நாளில் இருந்து ட்ரம்ப் பல்வேறு நாடுகள் மீது கடும் வரி விதிப்பை முன்மொழிந்தார். கடந்த ஏப்ரல் மாதம் அமெரிக்காவின் புதிய வரிகள் அறிவிக்கப்பட்டது.

அதன்படி ஐரோப்பிய ஒன்றியம் பொருட்களுக்கு அமெரிக்கா 30 சதவீத வரியை விதிப்பதாக குறிப்பிட்டு இருந்தது. தற்போது அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் ஒரு புதிய வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

புதிய ஒப்பந்தத்தின் கீழ், அமெரிக்காவிற்குள் நுழையும் ஐரோப்பிய ஒன்றிய பொருட்களுக்கு 15% வரி விதிக்கப்படும்.

அதற்கு ஈடாக, ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்க எரிசக்தி பொருட்கள் மற்றும் இராணுவ உபகரணங்களை அதிக அளவில் வாங்க ஒப்புக்கொண்டுள்ளது. (க-8)




# மருத்துவத்தை முடக்க நினைப்பது பாரிய அழிவுகளைத் தரும்

## சுகாதார பணியாளர்கள் கண்காணிப்பு அமைப்பு

காசாவை சேர்ந்த 28 மருத்துவர்கள் இஸ்ரேலிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ள பாலஸ்தீனத்தை சேர்ந்த சுகாதார பணியாளர்கள் கண்காணிப்பு அமைப்பு, அவர்களில் எட்டு பேர் அறுவை சிகிச்சை எலும்பியல் சிகிச்சை, தீவிர சிகிச்சை, குழந்தை நோயியல் மருத்துவம், இருதயவியல் போன்றவற்றில் நீண்டகால அனுபவம் மிக்க மருத்துவ ஆலோசகர்களாக பணியாற்றியவர்கள் எனவும் தெரிவித்துள்ளது.

இவர்களில் 21 பேர் 400நாட்களிற்கு மேலாக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ள சுகாதார பணியாளர்கள் கண்காணிப்பு அமைப்பு ஜூலை மாதத்தின் பின்னர் மூன்று மருத்துவ சுகாதார பணியாளர்களை இஸ்ரேல் கைது செய்துள்ளது என தெரிவித்துள்ளது.



பல சுகாதார மருத்துவ பணியாளர்கள் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்த பகுதிகளில் வைத்து இஸ்ரேலிய படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ள சுகாதார பணியாளர்கள் கண்காணிப்பு அமைப்பின் இயக்குநர் முவத் அல்செர் இவர்களை வெளியுலக தொடர்பின்றி பல மாதங்களாக தடுத்து வைத்துள்ளனர் என குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் மிக மோசமான விதத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றனர் என தெரிவித்துள்ள அவர் சட்ட விரோதமாக தடுத்து வைக்கபட்டுள்ள மருத்துவர்கள் மருத்துவ சுகாதார பணியாளர்களை விடுதலை செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மருத்துவமனைகள் தொடர்ந்து இயங்குவதில் பெரும் போராட்டத்தை எதிர்கொண்டுள்ள அதே வேளை காசாவில் மருத்துவ ஊழியர்கள் மத்தியில் அதிகரித்துவரும் பசி பட்டினி ஊட்டச்சத்து குறைபாடு காயமடைந்தவர்களிற்கு மருத்துவ கிசிச்சை வழங்க முடியாத அளவிற்கு அவர்களை பலவீனப்படுத்தியுள்ளது என மருத்துவர்கள் கார்டியனிடமும், புலனாய்வு இதழியலிற்கான அராபிய செய்தியாளர்கள் அமைப்பிடமும் தெரிவித்துள்ளனர். (க-8)

# சிறுவர்கள் வெறியாட்டம் கையை இழந்த இளைஞன்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவில் இந்திய மாணவரை நடு ரோட்டில் வைத்து ஐந்து சிறுவர்கள் கத்தியால் தாக்கியதில் அவரது கை துண்டாக்கப்பட்டது.

மெல்போர்னின் அல்டோனா மெடோவ்ஸ் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய இந்திய மாணவர் கடந்த 19ஆம் திகதி இரவு அங்கு உள்ள மருந்தகத்திற்கு சென்று விட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அவரை ஐந்து சிறுவர்கள் வழி மறித்துள்ளனர்.

ஒருவர் அவரது காற்சட்டைப் பைக்குள் கை விட்டுள்ளார். சவுரப் அவரை தள்ளிவிட முயன்ற போது, மற்றொரு சிறுவன் கத்தியை எடுத்து சவுரபின் கழுத்துக்கு நேரே வீச அதை தடுக்க அவர் முனைந்துள்ளார்.

அப்போது அவரின் கையில் கத்தி பாய்ந்தது.


கடும் வலியில் அலறி துடித்த அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர்.

உயிரை காக்க முதலில் கையை அகற்ற முடிவு செய்த டாக்டர்கள், அதன் பின் கடும் முயற்சி செய்து கையை மீண்டும் இணைத்து அறுவை சிகிச்சை செய்தனர். இந்த தாக்குதலில் ஈடுபட்ட சிறுவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (க-8)



# பட்டின் பசி தீ உலகெ

## காசாவ வாடும் நிலை தீர்க்கப்பட கொங்கும் பெ நடத்தி வருகி



# பாகிஸ்தானில் கவிழ்ந்த

## 10 பேர் உ

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் நகரில் இருந்து பஞ்சாப் மாகாணத்தின் லாகூர் நோக்கி பேருந்து ஒன்று


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# னியில் வாடும் காசா மக்களின் தீர்க்கப்பட வேண்டும்!

## காங்கிலும் பொதுமக்கள் போராட்டம்

சாவில் மக்கள் பட்டினியில் நிலையில் அவர்கள் பசி பட வேண்டும் என உல பொதுமக்கள் போராட்டம் நகின்றனர்.





இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெற்ற போராட்டத்தில் மக்கள் பாத்திரங்களில் தட்டி ஒலி எழுப்பித் தங்கள் வேதனையை வெளிப்படுத்தினர். பட்டினிச் சாவை தடுக்க நடவடிக்கை அண்டை நாடான எகிப்து எதுவும் செய்யவில்லை என அவர்கள் விமர்சித்தனர்.

காசாவில் மக்களை பட்டினி போடுவது மூலம் பெரிய இனப்படு கொலையே நடப்பதாக லண்டனில் நடைபெற்ற போராட்டத்தில் விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டது.

சிறு பாத்திரங்களைத் தட்டி ஒலி எழுப்பி போராட்டக்காரர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இப்போராட்டம் பிரதமர் இல்லம் அமைந்துள்ள தெருவில் நடைபெற்றது.

காசாவின் அருகிலுள்ள நாடான லெபனானிலும் பசித்த மக்களுக்கு உணவு அளிக்க ஏதாவது செய்யுங்கள் என உலக நாடுகளை வலியுறுத்தி போராட்டங்கள் நடைபெற்றன.

இவை எல்லாவற்றையும்விட காசா மக்கள் பட்டினிக்கு காரணமான இஸ்ரேலிலேயே மக்கள் போராட்டம் நடத்தினர். பசியால் மக்களை தவிக்க விடுவது மிகப்பெரிய குற்றம் என்றும் காசா மக்களே கவலைப்படாதீர்கள் நாங்கள் இருக்கிறோம் என்றும் அவர்கள் குரல் எழுப்பினர்.

ஆயிரக்கணக்கானோர் சாவின் விளிம்பில் உள்ள நிலையில் உலகநாடுகளின் அரசுகள் என்ன செய்கின்றன என இஸ்ரேலிய மக்களே முழக்கம் எழுப்பினர். (நி)

## ரில் பள்ளத்தில் த பேருந்து

உயிரிழப்பு

சென்று கொண்டிருந்தது.

பாலகசார் என்ற இடத்துக்கு அருகே சென்ற போது அந்தப் பேருந்தின் முன்பக்க டயர் ஒன்று வெடித்தது.

இதனால் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து தாறுமாறாக ஓடியது.


பின்னர் சாலையோரம் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்து விபத்தில் சிக்கியது.



இந்த விபத்தில் 10 பயணிகள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

படுகாயம் அடைந்த 30 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்த விபத்தில் சிக்கி 10 பேர் பலியானது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசாவுக்கு கருணை காட்டும் இஸ்ரேல்

## 10 மணிநேர போர் நிறுத்தத்தை அறிவித்தது



பாலஸ்தீனத்தின் காசாவில் மக்கள் அதிகம் வசிக்கும் மூன்று பகுதிகளில் மக்கள் உணவின்றி பட்டினியால் தவிப்பதால் அங்கு நாள்தோறும், 10 மணிநேர போர் நிறுத்தத்தை இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது. ஹமாஸ் பயங்கரவாதிகள் கட்டுப்பாட்டில் இருந்து காசாவை முழுமையாக மீட்கும் முயற்சியில் இஸ்ரேலின் இராணுவம் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த தாக்குதலில் இதுவரை பயங்கரவாதிகள், பொதுமக்கள் என 60,000 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். ஒன்றரை ஆண்டுக்கு மேலாக நீடிக்கும் போரால் மக்கள் உணவு, குடிநீர் தட்டுப்பாட்டால் அவதிப்படுகின்றனர்.

ஐ.நா அமைப்பின் வாயிலாக முன்னர் உணவு, மருந்து, குடிநீர் ஆகியவை விநியோகம் செய்யப்பட்டன. தினசரி நூற்றுக்கணக்கான ட்ரக்குகளில் இவை வந்தன. இவற்றை ஹமாஸ் பயங்கரவாதிகள் திருடிச் செல்வதாக குற்றம்சாட்டி அந்த நிவாரண ட்ரக்குகள் வருவதற்கு இஸ்ரேல் தடை விதித்தது.

அதன் பின் மே மாதம் முதல், அமெரிக்காவில் பதிவு செய்த காசா மனிதாபிமான அறக்கட்டளை மூலம் நான்கு மையங்கள் அமைத்து உணவு உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. இந்த முறையில் தினசரி 65 ட்ரக்குகள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன.

இந்நிலையில், போதிய உணவு கிடைக்காமல் காசாவில் பட்டினி பிரச்சினை பெரிய அளவில் உருவெடுத்துள்ளதால், இஸ்ரேலுக்கு சர்வதேச அளவில் அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து காசா சிட்டி, டெய்ர் அல்-பலாஹ் மற்றும் முவாசி ஆகிய மக்கள் அடர்த்தி நிறைந்த மூன்று பகுதிகளில் தினமும் காலை 10 மணி முதல் இரவு 8 மணிவரை 10 மணி நேரம் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது இஸ்ரேல் அரசு. (க-8)


## கல்யாணமாலை

### சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1995- இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>1இல்செவ்<br>கி-பா-57 1/4<br>உயரம்-5'8<br>தகைமை/தொழில்: PGDE,HR<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15876 | பிறப்பு-1988-இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>7இல்செவ்<br>கிபா-37<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: GS<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/15854 |
| பிறப்பு:1990-இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>8இல்செவ்<br>கி-பா-20<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்-NVQ 5,TO<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15878 | பிறப்பு-1990-இந்து<br>நட்சத்திரம்-அவிட்டம்<br>8இல்செவ்<br>கி-பா-22<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MSc,Hospital Molecular<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/15855 |
| பிறப்பு:1990-இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: O/L,Driver<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15879 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்-சதயம்<br>உயரம்-5'5"<br>தகைமை/தொழில்: O/L.தையல்<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15856 |
| பிறப்பு: 1986- இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>கி-பா-34 1/2<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-O/L,Shop<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15880 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>1இல்சூரிசெவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் -A/L, Salesman<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15860 |
| பிறப்பு: 1993- இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி-பா-28<br>12இல் செவ்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: IT field<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15882 | பிறப்பு-1978-இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>1இல் செவ்<br>உயரம்: 4'8"<br>தகைமை/தொழில் - Beautician<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15865 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 420

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## குருவைத் தேடி...

ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு குருநாதர் தேவை.

நமக்கு நல்ல வழிகாட்டுவதற்கு ஒரு குருநாதர் கிடைப்பாரா என்று ஏங்கினார். பலநாள் தவித்தார். ஒருவரும் கிடைக்கின்ற வழியாக தெரியவில்லை.

அவருடைய மனைவி ஒரு யோசனை சொன்னார்கள்.

"இதோ பாருங்கள்..." நாம் இரண்டுபேரும் இப்ப புறப்பட்டு காட்டுக்குப் போவோம். நடுக்காட்டிலே ஒரு நடைபாதை ஓரமாக உட்கார்வோம். அந்த வழியாக நமக்கு முன்னாடி வருகிற முதல் மனிதன் யாரோ அவனையே குருவாக ஏற்றுக்கொள்வோம். என்ன சொல்றீங்கள்? என்றார். இவரும் "சரி" என்று ஒத்துக்கொண்டார்.

உடனே அவர்கள் இரண்டுபேரும் புறப்பட்டு காட்டுக்குப் போனார்கள். நடுக்காட்டிலே ஒரு பாதை ஓரமாக உட்கார்ந்தார்கள். அப்போது திருடன் ஒருவன், தான் களவாடிய பொருட்களோடு அந்த வழியாக வந்தான். இவர்கள் பார்த்து விட்டார்கள். அவ்வளவுதான் உடனே ஓடிப்போய் அவன் காலிலே விழுந்தார்கள். அவன் காலை கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள்.

"எங்களை வாழ வைக்க வந்த வள்ளலே நீங்கள்தான் எங்களுக்கு குருநாதரா இருந்து ஒரு நல்ல வழியைக் காட்ட வேண்டும். எங்கள் மனதிலே உள்ள பாவங்களைப் போக்க வேண்டும். ஒரு நல்ல மார்க்கத்தை காட்ட வேண்டும்!" என்று வேண்ட ஆரம்பித்து விட்டார்கள்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை!

"என்ன இது... பழி பாவத்திற்கு அஞ்சாமல் வழிப் பறி செய்வது நம் தொழில். இவர்களுக்கு நாம் எப்படி வழிகாட்டுவது?" என்று யோசித்தான். "சரி - உண்மையைச் சொன்னாத்தான். இவர்கள் நம்மை விடுவார்கள் போல இருக்கு..!" என்று நினைத்து

"ஐயா... நான் ஒரு திருடன்... நீங்கள் நினைக்கின்ற மாதிரி இல்லை!" என்றான்.

"அதெல்லாம் இல்லை. நீங்கள்தான் எங்கள் குருநாதர்" என்று உறுதியாக இருந்தார்கள் அவர்கள்.

திருடன் பார்த்தான், தப்பிக்கறதுக்கு என்ன வழி என்று யோசிச்சான்.

"சரி... நீங்கள் இரண்டு பேரும் அப்படியே பத்மாசனம் போட்டு உட்காருங்கள்.. கண்ணை மூடிககொள்ளுங்கள். நான் சொல்கிற வரைக்கும் நீங்கள் அப்படியே உட்கார்ந்திருக்க வேண்டும்!" என்றான்.

குருநாதர் கட்டளையாக அதை அவங்க ஏற்றுக்கொண்டு கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்து விட்டார்கள்.

இவன் பார்த்தான். இதுதான் சமயம் எனறு மெதுவாக அங்கேயிருந்து நழுவி ஓடியே போய் விட்டான்.

அதுக்கப்புறம் அவன் காவலர்கள்கிட்டே மாட்டிக்கொண்டான். சிறையிலே போட்டுவிட்டார்கள்.

இவர்கள் இரண்டு பேரும் இப்படியே உட்கார்ந்திருக்கிறார்கள்.

இவங்களுடைய மனஉறுதி கடவுளையே யோசிக்க வைத்ததாம். உடனே இறைவனும் இறைவியும் இவர்கள் முன்னாடி வந்து நின்று காட்சி கொடுத்தார்கள்.

"இதுமாதிரி... நாங்கள்தான் சொன்னார்கள். வந்திருக்கிறோம்" என்று "பக்தர்களே எழுந்திருங்கள்!" என்று சொன்னார்கள்.

ஆனால் அவர்களோ, "பெருமானே!" எங்களுடைய குருநாதர் அனுமதி இல்லாமே இந்த இடத்தைவிட்டு நகர மாட்டோம்!" என்றுவிட்டார்கள்.

இறைவனுக்கே இது ரொம்ப சிக்கலாகப் போனது!

உடனே அந்த நாட்டு அரசன் கனவுலே இறைவன் தோன்றி சிறையிலே இருக்கின்ற திருடனை விடுதலை செய் என்று சொன்னார். திருடனுடைய கனவுலேயும் தோன்றி விபரத்தைச் சொன்னார். திருடன் விடுதலையானதும் நேராக அந்த காட்டுக்குப் போனான். அவங்க அப்படியே உட்கார்ந்திருந்தார்கள். இன்னும் கண்ணை மூடிக்கொண்டே.

"உங்கள் குருநாதன் வந்திருக்கிறேன் கண்ணைத் திறவுங்கள்!" என்றான். அப்பத்தான் அவர்கள் கண்ணைத் திறந்தார்கள்.

இவன் நடந்தது முழுவதும் சொன்னான்.

அப்போது ஆகாயத்தலேயிருந்து ஒரு குரல் கேட்டதாம். உங்களுடைய தீவிர குருபக்தி போற்றுதற்குரியது. குருவிடம் பக்தி, பணிவு, நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் எதையும் பெறுவார்கள். அப்படியே நீங்களும் அடைவீர்கள்! என்றது அந்தக் குரல். தம்பதியருக்கு ஞானத்தெளிவு வந்துவிட்டதாம். அந்தத் திருடனும் திருந்தி நல்லவனா ஆகிவிட்டானாம்.

இது வாரியார் சுவாமிகள் சொன்ன கதை.

"நம்பிக்கை" எப்படிப்பட்ட நல்ல விளைவுகளையெல்லாம் ஏற்படுத்திறது என்பதை இதிலேயிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டும்.


குருவைத் தேடி காட்டுக்குப்போன இன்னொருத்தனுடைய கதை உங்களுக்குத் தெரியுமா? இவன் இந்தக் காலத்து இளைஞன். ஒரு நடு காட்டுக்குப் போய் விட்டான். யாரும் கிடைக்கவில்லை. அதுமட்டும் இல்லை. வழிகாட்டுவதற்கு ஒரு குருவைத் தேடி வந்தவன் இப்ப வந்த வழியையே மறந்து விட்டான். திரும்பி போவதற்கு வழி தெரியவில்லை. எப்படியோ வீட்டுக்கு போனால் போதும் என்று ஆகிட்டுது. ஒன்றும் புரியவில்லை. பசி, தாகம், பயம். இரண்டு நாள் ஆகிட்டுது.

நல்லவேளையாக அந்த வழியாக ஒரு ஆள் வந்தான். இவன் ஓடிப்போய் அவன் கையைப் பிடித்துக் கொண்டு "ஐயா நான் இந்த நடுக்காட்டிலே வழிதவறி காணாமல் போய் இரண்டு நாள் ஆனது! நல்லவேளை. என்னுடைய அதிர்ஷ்டம் உங்களை சந்தித்து விட்டேன்!" என்றான் உற்சாகமாக! இதற்கு அவன், "ரொம்ப சந்தோஷப்படாதீர்கள்.." நான் காணாமல் போய் நான்கு நாள் ஆச்சு! என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் கந்தனுக்கு கொடிச்சீலை வழங்கும் நிகழ்வு





(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், கொடியேற்றத்துக்காக சம்பிரதாயப் பூர்வமாக கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை சம்பிரதாயப் பூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

அதன்படி யாழ் சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு அருகில் உள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற விஷேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து அங்கிருந்து சிறிய தேர் ஒன்றில் கொடிச்சீலை பருத்தித்துறை வீதி ஊடாக எடுத்து செல்லப்பட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தினை வந்தடைந்து கொடிச்சீலை நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

நல்லூர் ஆலய மஹோற்சவ கொடியேற்றம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்களுக்கு மஹோற்சவ திருவிழாக்கள் இடம்பெறும்.

மஹோற்சவ திருவிழாக்களின் 10 ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதியும், 22 ஆம் திருவிழாவான மாம்பழத் திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் 19 ஆம் திகதியும் , 24 ஆம் திருவிழாவான தேர் திருவிழா ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி காலையும் , மறுநாள் 22 ஆம் திகதி காலை தீர்த்த திருவிழா இடம்பெற்று, மாலை கொடியிறக்கம் இடம்பெற்று, மஹோற்சவ திருவிழாக்கள் நிறைவு பெறும். (க-8-33-104)

# வரலாறு மீண்டுமொரு சந்தர்ப்பத்தை செம்மணிப் புதைகுழியாய் தந்துள்ளது

## பொ.ஐங்கரநேசன் தெரிவிப்பு



(அராலி)

தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே காலத்துக்குக் காலம் தமிழர்களுக்கெதிரான கலவரங்கள் நிகழ்த்தப்பட்டன. முள்ளிவாய்க்கால் வரை இதுவே நீண்டது.

இப்போது ஆடிக்கலவர நாளில் சகோதர தினத்தை முன்னெடுத்துள்ள ஜே.வி.பி அரசாங்கம் விரைவில் இலங்கையர் தினத்தைக் கொண்டாடவுள்ளது. ஆனால், இந்தத் தினங்களைக் கொண்டாடுவதால் மட்டும் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியாது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

கறுப்பு யூலை நினைவுக் கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நினைவேந்தல்கள் வரலாற்றை நினைவுபடுத்துகின்றன. வரலாறு ஒருவரை எங்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றதோ அங்கிருந்துதான் அவர் தனது அடுத்த பயணத்தைத் தொடர முடியும்.

நதிகளைப் போன்றே வரலாறும் பின்னோக்கிப் பாய்வதில்லை. இதுவே வரலாற்றின் நியதி. வரலாறு தமிழ் மக்களை முள்ளிவாய்க்காலில் கொண்டு வந்து நிறுத்தியது. ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட அந்த இடத்தில் இருந்துதான் அஞ்சலோட்டம் போன்று அடுத்த போராட்டத்தைத் தமிழ் மக்கள் ஜனநாயக வழியில் முன்னெடுத்திருக்க வேண்டும்.

வரலாறு இன்னுமொரு சந்தர்ப்பமாகச் செம்மணியில் மனிதப் புதைகுழிகளை அடையாளப்படுத்தியுள்ளது. போரின் சாட்சிகளாக, இன அழிப்பின் சாட்சிகளாக எம்முன்னால் பலர் இன்றும் உள்ளார்கள். இவர்களால் உயிர்ப்பயம் காரணமாக உண்மைகளை அதிகம் வெளிப்படுத்த முடியாது. உயிருள்ள சாட்சியங்களைவிட வலுவான சாட்சியங்களாக இன்று எம்முன்னே செம்மணி மனிதப்புதைகுழிகளும் அவற்றில் இருந்து வெளிப்படும் எமது உறவுகளின் எலும்புக்கூடுகளும் உள்ளன.

எலும்புக்கூடுகள் தனது கழுத்தை இறுக்கப் போகின்றது என்று அஞ்சும் பேரினவாதம் இதனைத் திசை திருப்புவதற்கான சகல எத்தனங்களிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. செம்மணிப் புதைகுழிகள் தந்துள்ள அரியவாய்ப்பை எமது தலைவர்கள் சரியாகப் பயன்படுத்தி நீதிக்கான, விடுதலைக்கான எமது பயணத்தை வேகமாகத் தொடர முன்வர வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (க-8-104)



மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்பாள் ஆலய மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்றையதினம் வெகு சிறப்பாக நடைபெற்றது. (படம்:கஜிந்தன்)

# மாட்டுவண்டி சவாரி போட்டி

(தருமபுரம்)

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான மாபெரும் மாட்டு வண்டி சவாரி போட்டி நேற்று முன்தினம் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கனை பகுதியில் அமைந்துள்ள தமிழ் முற்றம் என்னும் சவாரித் திடலில் இடம்பெற்றது.

சுமார் பதினைந்து வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் இருந்து 130 இற்கும் மேற்பட்ட ஜோடிகள் போட்டியில் பங்குபற்றின.

பங்குபற்றி வெற்றி ஈட்டிய காளைகளுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்பட்டன. (8-316)



# லயன்ஸ் கழகத்தால் உதவிகள் வழங்கல்

(வவுனியா)

வவுனியா மாவட்ட சர்வதேச லயன்ஸ் கழகத்தால் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா கந்தசுவாமி ஆயைத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளின் பின்னர் ஆலய வளாகத்தில் குறித்த நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அந்தவகையில் இலவச கண் பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கல், வறிய குடும்பங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கல், பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப் பைகள் வழங்கல், சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் பங்குபற்றச் செல்லும் வீராங்கனைகளுக்கு உதவித் தொகை வழங்கல், சக்கர நாற்காலி போன்றன வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா மாவட்ட லயன்ஸ் கழகத்தின் தலைவர் கே.செல்வராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக சர்வதேச லயன்ஸ் கழகத்தின் வடமாகாண ஆளுநர் கே.எம்.பத்மநாதன் மற்றும் அவரது துணைவியார் லயன் பத்மாதேவி ஆகியோர் கலந்து கொண்டதுடன், வவுனியா மாவட்ட லயன்ஸ் கழகத்தின் முக்கியஸ்தர்கள், அங்கத்தவர்கள் கலந்து சிறப்பித்தனர். (8-250)



சர்வதேச கண்டல் காடுகள் தினத்தை முன்னிட்டு எதிர்காலத்துக்கான சுற்றுச்சூழல் கழகம் மற்றும் சிறகுகள் அமையம் இணைந்து நடத்திய கண்டல் காடுகள் ஊடான களப்பயணம் ஒன்று அண்மையில் மண்டைதீவு சதுப்பு நிலப்பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதில் அராலி கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 832





“அமுதா! சத்தம் செய்யாமல் என்னைத் தொடர்ந்து வா!” என்று கூறினாள்.

குரல் வந்த திக்கை நோக்கி இருவரும் மெல்ல நடந்து சென்றார்கள். சற்று நேரத்தில் எல்லாம் அதிசயமான காட்சி ஒன்றைக் கண்டார்கள்.

ஊமை ராணி ஒரு மரத்தின் அடிப்பகுதியில் சாய்ந்து நின்று கொண்டிருந்தாள். அவளுடைய கையில் இளந்தளிர்கள் சில வைத்துக் கொண்டிருந்தாள். அவளைச் சுற்றிலும் ஏழெட்டு அழகிய மான்கள் நின்று கொண்டிருந்தன. அவள் கையிலிருந்த தளிர்களைத் தின்பதற்கு அவை போட்டியிட்டன. அவளுடைய தோளின் மீது ஒரு சிறிய மான் குட்டி உட்கார்ந்து தன் சின்னஞ் சிறிய அழகிய கண்களால் அவளுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது.

இந்த அபூர்வமான தோற்றத்தைக் கண்டு பூங்குழலியும் அமுதனும் சிறிது நேரம் அசையாமல் நின்றார்கள். முதலில் ஊமை ராணியின் தோள் மேலிருந்த மான் குட்டிதான் அவர்களைப் பார்த்தது. பார்த்ததும் தோள் மீதிருந்து துள்ளிக் கீழே குதித்தது. மற்ற மான்களும் அவர்களைப் பார்த்துவிட்டன. எல்லா மான்களும் அவர்கள் நெருங்கி வந்தால் பாய்ந்து ஓடுவதற்கு ஆயத்தமாக நின்றன. பின்னர் ஊமை ராணியும் அவர்களைப் பார்த்தாள். அவள் தொண்டையிலிருந்து இன்னொரு விசித்திரமான ஒலி வந்தது.

அதைக் கேட்டதும் மான்கள் எல்லாம் துள்ளிப் பாய்ந்து ஓடிப் போய் விட்டன. “அத்தைக்கு மனிதர்களின் பாஷை மட்டுந்தான் தெரியாது. மிருகங்களின் பாஷை நன்றாய்த் தெரியும்” என்று பூங்குழலி சொல்லிக் கொண்டே ஊமை ராணியிடம் சமிக்ஞை செய்தாள்.

ஊமை ராணி இம்முறை ஓடவில்லை பூங்குழலியைப் பார்த்துப் பதில் சமிஞ்ஞை செய்தாள். பூங்குழலி நெருங்கி வந்ததும் ஊமை ராணி அவளைக் கட்டி அணைத்துக் கொண்டு உச்சி முகந்தாள்.

சேந்தன் அமுதன் சற்றுத் தூரத்திலேயே நின்று கொண்டிருந்தான்.

அத்தையும் மருமகளும் சிறிது நேரம் மௌன பாஷையில் பேசினார்கள். பின்னர் பூங்குழலி அமுதனை அருகில் வரும்படி அழைத்தாள்.

ஊமை ராணி அவனை மேலும் கீழும் சில தடவை உற்றுப் பார்த்துவிட்டு அவன் தலை மீது கை வைத்து ஆசி கூறும் பாவனையில் சிறிது நேரம் இருந்தாள். பின்னர் கையை அவன் தலையிலிருந்து எடுத்து விட்டுப் பூங்குழலியைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள்.

மூன்று பேரும் ஓடைக் கரைக்கு வந்தார்கள். ஊமை ராணி அங்கேயே உட்கார்ந்து கொண்டு பூங்குழலிக்குப் போய் வரும்படி சமிஞ்ஞை காட்டினாள்.

பூங்குழலி “வா! அமுதா! வீட்டுக்குப் போகலாம், அத்தை வரமாட்டாளாம். இங்கே சாப்பாடு கொண்டு வர வேண்டுமாம்” என்றாள். இருவரும் கலங்கரை விளக்கை நோக்கிப் போனார்கள். “பூங்குழலி! எனக்கு என்ன சொல்கிறாய்?” என்று அமுதன் கேட்டான்.

“உன்னோடு தஞ்சைக்கு வரலாம் என்ற எண்ணம் எனக்கு இருந்தது. அது இப்போது சாத்தியமில்லை அத்தைக்கு அவருடைய செல்வச் சுவீகாரப்பிள்ளையைப் பார்க்க வேண்டுமாம். ஆகையால் மறுபடியும் நாகைப் பட்டினப் பிரயாணம் எனக்கு இருக்கிறது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கண்டெடுத்த கடிகாரம்



மேட்டுப்பாளையம் என்னும் சிற்றூரில் கன்னையன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு சுகுமாரன், வளர்மதி, என இரு குழந்தைகள், இருவரும் முறையே ஏழாவது வகுப்பும், மூன்றாவது வகுப்பும், அந்த ஊரில் உள்ள அரசு பள்ளியிலேயே படித்து வந்தார்கள். அவர்கள் வசித்து வந்த ஊர் பெரிய நகரமும் இல்லாமல் சிறிய கிராமமும் இல்லாமல் நடு நிலையாக இருந்தது. அங்குள்ள பள்ளியில் எட்டாவது வகுப்பு வரை இருந்தது.

சுகுமாரன் ஓரளவு நன்ராக படிப்பான். வளர்மதியும் நன்றாக படிப்பவள். இருந்தாலும் கன்னையன் ஒரு ஏழை. அவன் அங்குள்ள விவசாய தோட்டங்களில் கூலிக்கு வேலை செய்பவன். அவன் மனைவியும் அவனுடன் கூலி வேலைக்கு செல்பவள். இவர்களால் இருவரையும் இந்தளவுக்கு படிக்க வைப்பதற்கே மிகவும் துன்பப்பட்டார்கள்.

எப்படியாவது இவர்கள் இருவரையும் படிக்க வைக்க வேண்டும் என்று அடங்காத ஆவலுடன் இருந்தார்கள். ஆனால் அவர்களின் வறுமை அந்த குழந்தைகளை மேலும் படிக்க வைக்க முடியாமல் தத்தளித்துக்கொண்டிருந்தது.

அவர்கள் பள்ளி தலைமை ஆசிரியர் பெயர் மெய்யப்பன். அவர் மிகவும் கண்டிப்பானவர். பள்ளிக்கு சரியான நேரத்துக்கு வந்துவிட வேண்டும். உடைகள் சுத்தமாக போட்டிருக்க வேண்டும். இரண்டையும் கண்டிப்பாக கடைபிடிப்பதில் உறுதியானவர்.

சுகுமாரனும், வளர்மதியும், சில நேரங்களில் தோட்டத்தில் பூ பறிக்கும் வேலைக்கு செல்வர். விடியற்காலையில் பூ பறிக்க ஆரம்பித்து, எட்டு மணி வரை பூ பறித்து கொடுத்தால் ரூபாய் இரண்டு கிடைக்கும்.

இது அவர்கள் குடும்பத்திற்கு பேருதவியாக இருக்கும். அதன் பின்னரே இருவரும் வீட்டுக்கு வந்து பள்ளிக்கு கிளம்புவார்கள். இதனால் சில நேரங்களில் நேரம் தவறி பள்ளிக்கு செல்வதுண்டு. இதனால் பள்ளி தலைமையாசிரியர் மெய்யப்பனிடம் தண்டனைகள் பெற்றதுண்டு.

தலைமையாசிரியர் மெய்யப்பனிடம் அந்த ஊர் ஆட்கள் மிகுந்த மரியாதை வைத்திருந்தனர். ஊர் பிரச்சினைகள் எதுவானாலும் ஊர்க்காரர்கள் தலைமையாசிரியரிடம் ஒரு வார்த்தை கேட்டுத்தான் செய்வார்கள்.

வாத்தியார் என்ன சொல்றாரு? என்று கேட்பார்கள். ஒரு நாள் சுகுமாரனும், அவன் தங்கையும் விடியற்காலையில் தோட்டத்தில் ”பூ” பறிக்க பாதை வழியே நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது வழியில் “கைக் கடிகாரம்” ஒன்று கிடந்தது. இருவரும் ஆச்சரியத்துடன் அதை எடுத்து பார்த்தனர். கடிகாரம் விலை உயர்ந்ததாய் இருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் மண்ணை ஆளுகின்றான். மண் மனிதனை ஆளுகின்றது. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## 'மண்' முக்கியம் என்பதை உணர்த்தினாயோ முருகா!

நல்லூர் முருகா! உன் பொன்னார் திருவடிகளைப் போற்றி செய்கிறேன். இன்று உன் மகோற்சவம் ஆரம்பம்.

உன் மகோற்சவம் என்றால் சொல்லவா வேண்டும்.

அலங்காரக் கந்தனின் திருவீதி உலாவைப் பார்ப்பதற்கென்றே அடியார் கூட்டம் படை எடுக்கும்.

அதிலும் விசேட திருவிழாக்கள் என்றால் தக தகவென ஜொலிக்கும் உன் பேரழகைச் சொல்லவா வேண்டும்.

நல்லது. பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடிகிளியே ஆறுமுகன் தஞ்சமடி என்று தவத்திரு யோகர் சுவாமிகள் அன்றே கூறிவைத்தார்.

ஆக, நீ இருக்கையில் எங்களுக்கு ஏது? குறை.

ஆனாலும் உன் மகோற்சவத்தின்போது ஆலய வெளி வீதிக்கு பரப்புவதற்கான மணல் மண்ணைப் பெற்றுக் கொள்வதில் கடும் இடர்பாட்டைச் சந்தித்ததாக அறிந்தேன். மிகுந்த வேதனை.

நல்லூர்க் கந்தப் பெருமானுக்கே இந்தக் கதியா என்று நினைத்தபோது இதயம் நொந்து கொண்டது.

நல்லூர்க் கந்தனின் மகோற்சவ காலத்தில் அடியார்கள் அங்கப் பிரதட்சணம் செய்வதற்கு ஏதுவாக, காலாகாலமாக மணல் மண்ணைப் பரப்புகின்ற வழமைக்கு இடையூறு வந்துற்றதன் காரணம் புரியவில்லை.

நல்லூர் முருகனுக்கு மண் தர முடியாது என மறுத்தவர்கள்; நீ எங்களுக்கு மண்ணை மீட்டுத்தரவில்லை என்ற கோபத்தால் கூறினரோ தெரியவில்லை.

அல்லது எனக்கே மண் தர மறுக்கும் உங்களுக்கு மண்ணைத் தந்திருந்தால், நிலைமை என்னவாகி இருக்கும் என்பதை சுட்ட வேண்டும் என்று நீ நினைத்தாயோ அதுவும் புரியவில்லை.

ஆனாலும் நல்லூர்க் கந்தனின் மகோற்சவ காலத்தில் மணல் மண் எடுப்பதில் இத்துணை இடர்பாட்டை எவரும் ஏற்படுத்தியிருக்கக் கூடாது.

அத்தகு நிலைக்கு அரச நிர்வாகங்களும் இடம்கொடுத்திருக்கலாகாது.

குறித்த இடங்களில் மண்ணை எடுப்பது பொருத்தமற்றது எனில், மாற்றுவழிகள் பற்றிச் சிந்தித்திருக்க வேண்டும்.

ஆக, அரச நிர்வாகத்தின் மெல்லினப் போக்கே இத்துணை நிலைமைக்குக் காரணம் என்பது புரிதற்குரியது.

சிலவேளைகளில் நம் அரச நிர்வாகம் உசார் அடைய வேண்டும். ஏழை மக்கள் வீடு அமைப்பதற்கு மண்ணுக்காக மட்டும் ஏகப்பட்ட இலட்சங்களைச் செலவிட வேண்டியுள்ளது.

இது எந்த வகையிலும் நியாயமற்றது. இது தொடர்பில் அரச நிர்வாகம் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகவும் நல்லூர்க் கந்தன் "மண்" விளையாட்டை நடத்தியிருக்கலாம்.

இதையும் கடந்து எனக்கே மண் பிரச்சினை என்றால், நீங்கள் அதை எப்படி மறந்து போவீர்கள். மனதில் சதா நினைத்துக் கொள்ளுங்கள். **மண்** மிகவும் முக்கியமானது. இதை உணர்த்தவும் நல்லூர்க் கந்தன் திருவிளையாடல் புரிந்திருக்கலாம்.

பொருத்தம் எதுவோ அதை எடுத்தலே தகும்.

# மாகாணசபைத் தேர்தலுக்கான முதற்கட்டப் பணிகள் ஆரம்பம்

## அமைச்சர் சந்தன அபேரத்ன

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மாகாணசபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய செயல்முறை இதுவரை நிறைவடையவில்லை.

அத்துடன் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான புதிய தேர்தல் முறைமைக்கான வரைவு விரைவில் நிறைவேற்றப்படவுள்ளது.

அதற்கான சட்ட வரைவை விரைவாக நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

முன்னதாக மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்று பெஃப்ரல் அமைப்பு உட்பட்ட பல அமைப்புக்கள் கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(ம-7)

### சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் நுழைய முற்பட்ட இருவர் கைது

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் படகு மூலம் இலங்கைக்குள் நுழைய முற்பட்ட இந்தியர் ஒருவர் உள்ளிட்ட இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் கடற்பரப்பில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த படகொன்றினை கடற்படையினர் வழிமறித்து சோதனையிட்டனர். அதன் போது படகினுள் சந்தேகத்திற்கிடமான முறையில் இருவர் பயணித்தமையை அவதானித்த கடற்படையினர் அவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன் போது ஒருவர் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்தவர் எனவும் மற்றைய நபர் இந்தியாவின் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் கடற்படையினரின் விசாரணைகளில் தெரியவந்ததையடுத்து இருவரையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

(ம-7)

### மன்னார் கடற்பரப்பில் பிளாஸ்டிக் துவல்களை அகற்றும் செயற்பாடு ஆரம்பம்

மன்னார் கடற்பரப்பில் பிளாஸ்டிக் துவல்களை அகற்றும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கேரளக் கடற்பரப்பில் பிளாஸ்டிக் துவல்களை ஏற்றிச் சென்ற கப்பல் கடந்த மே மாதம் 25 ஆம் திகதி மூழ்கிய நிலையில் குறித்த கப்பலில் காணப்பட்ட பிளாஸ்டிக் துவல்கள் தற்போது மன்னார் மாவட்டத்தின் கடற்கரையோரங்களில் கரை ஒதுங்கி வருகிறது.

இந்த நிலையில் கரையொதுங்கித் தேங்கிக் கிடக்கும் பிளாஸ்டிக் துவல்களை அகற்றும் செயற்பாடு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுத் திங்கட்கிழமை (28) மன்னார் சௌத்பார், கீரி, தாழ்வுபாடு கடற்கரைப் பகுதிகளில் பிளாஸ்டிக் துவல்களை அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் [illegible] மக்களைப் பயன்படுத்தி அவர்களுக்கு நாளாந்த கொடுப்பனவு ஒன்றை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

கடல் சூழலையும் கடல்வாழ் உயிரினங்களையும் பாதுகாக்கும் வகையில் குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடல்சார் பாதுகாப்பு சூழல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் குறித்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆரம்ப நிகழ்வு மன்னார் தாழ்வுபாடு கடற்கரையில் நேற்று காலை ஆரம்பமானது.

குறித்த ஆரம்ப நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப், கடல்சார் பாதுகாப்புச் சூழல் திணைக்கள பிரதி நிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ம-7,285)

### வீதிப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு

வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான விழிப்புணர்வு செயலமர்வு நாளை (30) காலை 09.00 - நண்பகல் 12.30 மணி வரை யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இச் செயலமர்வின் சிறப்பு விரிவுரையாளர்களான யாழ்.போதனா வைத்தியசாலையின் சிறுவர் சத்திரசிகிச்சை நிபுணர் சயந்தன், யாழ். போதனாவைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி மயூரதன், பிரதம வாகனப் பரிசோதகர் ஜெயசேகர, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயமன ஆகியோர் யாழில் ஏற்படும் வீதி விபத்துக்களின் தாக்கங்கள், அவற்றை தவிர்க்க எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் சிறப்புரை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்(நிதி) சோதிநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ். பிரதேச செயலகத்தின் பிரதம செயலாளர் சுதர்சன் மற்றும் STS வைத்தியசாலையின் இயக்குநர் வைத்தியக் கலாநிதி சந்திரகுமார் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(ம - 7)

### சுமார் ரூ.10 கோடி பெறுமதியான போதைப்பொருட்களுடன் இந்தியப் பிரஜைகள் இருவர் கைது

சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான குஷ் ரக போதைப்பொருளுடன் இந்தியப் பிரஜைகள் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இந்திய நாட்டைச் சேர்ந்த 36 வயதுடைய ஆண் மற்றும் 56 வயதுடைய பெண் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேக நபர்களான இந்தியப் பிரஜைகள் இருவரும் மலேசியாவிலிருந்து நேற்று அதிகாலை 12.00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

பின்னர் சந்தேக நபர்களான இந்தியப் பிரஜைகள் இருவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்ற போது இருவரும் கொண்டு வந்த இரு பயணப்பொதிகளும் விமான நிலையப் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த பைகளில் மிகவும் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 கிலோகிராம் குஷ் போதைப் பொருள் விமான நிலையப் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது .

இதன்போது சந்தேக நபர்களான இந்தியப் பிரஜைகள் விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு மேலதிக விசாரணைக்குட்படுத்தப்படுகின்றனர்.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 23

சொக்கன்

உளவுத்துறை பாஷையில் இதனைக் கவர் செய்வது என்று அழைப்பார்கள்.

இதையும் நம் ஊர் சினிமாவில் நிறையப் பார்த்திருக்கிறோம் ஹீரோ ஒரு வாத்தியாராகவோ, போஸ்ட் மனாகவோ, பிக் பாக்கெட்காராகவோ வருவார். வில்லன்களோடு நெருங்கிப் பழகி விடயங்களைத் தெரிந்துகொள்வார் கடைசியில் ஹா ஹாஹா நான் யார் தெரியுமா? என்றபடி உண்மையைச் சொல்வார். எல்லோரும் வாயைப் பிளப்பார்கள்.

வெளிநாடு போகிற உளவாளிகளும் இப்படித்தான். பத்திரிகையாளர்களாக, அரசாங்க அதிகாரிகளாக, சுற்றுலாப் பயணிகளாக, சமூக சேவை செய்கிறவர்களாக, இதுபோல் இன்னும் ஏகப்பட்ட மாறுவேடங்களின் மூலம் தங்களுடைய உண்மையான நோக்கத்தைக் கவர் செய்துவிடுவார்கள்.

இப்படி உபத்திரமில்லாத காரணங்களைச் சொன்னால்தான் அவர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான அனுமதி சுலபத்தில் கிடைக்கும். அங்கே சென்று சேர்ந்தபிறகு அவர்கள் என்ன செய்தாலும் யாருக்கும் சந்தேகம் வராது. பரம ரகசியமாக உளவு வேலைகளை முடித்துக் கொண்டு திரும்பிவிடலாம்.

இங்கிலாந்துக்காரான ஃபிரான்சிஸ் ஃபோலி ஜேர்மனிக்கு அனுப்பப்பட்டபோது அவருக்குப் போடப்பட்ட மாறுவேடம் பாஸ்போர்ட் அரிகாரி.

அதாவது ஃப்ரான்சிஸ் ஃபோலி சும்மாக் காட்சிக்கு தினமும் பாஸ் போர்ட் அலுவலகம் போக வேண்டும் அட் டென்டன்ஸ் ரெஜிஸ்டரில் கையெழுத்துப் போட வேண்டும். தன் மேசையில் இருக்கிற பேப்பர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டும். யாரும் கவனிக்காத போது ஒரு தம் அடிச்சிட்டு வந்திடுறேன் என்பதுபோல் ஏதாவது



காரணத்தைச் சொல்லிவிட்டு வெளியே வந்து உளவு வேலைகளைக் கவனிக்க வேண்டும். அப்புறம் ஒன்றும்தெரியாதபாப்பா போல அலுவலகத்துக்குத் திரும்பி வந்து டீ குடிக்கலாம்.

அரட்டை அடிக்கலாம் சாயந்திரமானதும் சமர்த்தாக வீட்டுக்குத் திரும்பி வந்து அதுவரை திரட்டிய எல்லாத் தகவல்களையும் இங்கிலாந்துக்கு அனுப்பிவைக்கலாம்.

சுலபமான வேலைதான். வேடம் கலையாதவரை பிரச்சினையில்லை. நடுவில் மாட்டிக்கொண்டால்தான் வம்பு. தீர்த்துக்கட்டிவிடு வார்களர்.

ஃப்ரான்சிஸ் ஃபோலி தனக்குக் கொடுக்கப்பட்ட உளவுத்துறை வேலைகளை ஒழுங்காகக் கவனித்தார். அதேசமயம் தன்னுடைய பாஸ்போர்ட் அதிகாரி வேடத்தையும் வீணடிக்காமல் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார்.

அப்போது ஜேர்மனி முழுவதும் யூதர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. ஹிட்லரின் பிடி இன்னும் இறுகுவதற்கு முன்னால் எப்படியாவது தப்பித்துப்போய்விட வேண்டும் என்று யூத மக்கள் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

மொசாட்டும் அவர்களைப் பாலஸ்தீனத்துக்குக் கொண்டு செல்வதற்கான ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தது.

ஆனால் மொசாட் நினைத்ததுபோல் இந்த வேலை அத்தனை சுலபமாக இல்லை. பணப் பிரச்சினையில் ஆரம்பித்து ஏகப்பட்ட தடைகள் தலைவலிகள்.

ஜேர்மனி எல்லையில் மொசாட் ஒரு பஸ்ஸையோ கப்பலையோ நிறுத்திவைத்து பாலஸ்தீனம் போறவர்கள் எல்லாம் ஏறிக்கொள்ளுங்கள் என்று கூவ முடியாது. யூதர்கள் ஜேர்மனியிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதி வேண்டும் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் துரத்தப்படுகிறவர்கள் பாஸ்போர்ட் விசாவுக்கெல்லாம் எங்கே போவார்கள்? இந்தப் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்று புரியாமல் குழம்பியது மொசாட்.

இந்த நேரத்தில்தான் ஃப்ரான்சிஸ் ஃபோலி மொசாட்டைப்பற்றிக் கேள்விப்பட்டார். யூதர்களைப் பாலஸ்தீனத்துக்குக் கடத்திச் செல்வது அதன் மூலம் அவர்களை உயிர் பிழைக்கவைப்பது என்கிற திட்டம் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது.

ஆனால் ஒரே பிரச்சினை இப்படி யூதர்களைப் பாலஸ்தீனத்துக்குக் கடத்திவருவது சட்ட விரோதம். அப்போது பாலஸ்தீனத்தை ஆட்சி செய்துகொண்டிருந்த இங்கிலாந்து அரசாங்கம் இதற்குக் கடுமையான தடை விதித்திருந்தது.

ஃபிரான்சில் ஃபோலி ஓர் இங்கிலாந்துப் பிரஜை அந்த நாட்டு உளவுத்துறைக்காக வேலை செய்கிற அரசாங்க அதிகாரி.

அப்படியானால் மொசாட்டின் ஆள் கடத்தல் வேலைகளைப்பற்றிக் கேள்விப்பட்டவுடன் அவர் என்ன செய்திருக்க வேண்டும்?

உடனடியாகத் தன்னுடைய மேலதிகாரிகளை அழைத்து இப்படி ஒரு குரூப் யூதர்களைப் பாலஸ்தீனத்துக்குக் கடத்தப்பார்க்கிறார்கள் என்று தனக்குத் தெரிந்த எல்லாத் தகவல்களையும் சொல்லியிருக்க வேண்டும்.

அந்தக் குழுவை ஒடுக்குவதற்கான வழிகளையும் சிபாரிசு செய்திருக்க வேண்டும். அதுதான் ஓர் உளவாளியின் கடமை.

ஆனால் ஃபிரான் சிஸ் ஃபோலி அப்படிச் செய்யவில்லை. மொசாட் செய்வது சட்டப்படி தவறாக இருந் தாலும் கொஞ்சம் மனிதாபிமானத்தோடு யோசித்தபோது அதில் இருக்கும் நியாயயம் அவருக்குப் புரிந்தது. மொசாட்டைக் காட்டிக் கொடுப் பதில்லை என்று முடிவு செய்துவிட்டார்.

அதேநேரம் அவருக்கு மொசாட் யூதர்கள் மீது தனி ஆர்வம் பிறந்தது. ஜேர்மனியில் இருக்கும் யூத இனத்தவரைப்பற்றி விபரங்களைத் திரட்ட ஆரம்பித்தார்.

ஹிட்லரின் அரசாங்கம் அவர்களுக்குச்செய்துகொண்டிருக்கிற கொடுமைகளைப் பற்றிக் கேள்விப்பட்டபோது அவருக்கு உடல் நடுங்கியது.

ஜேர்மனியில் இருக்கும் யூதர்கள் அனைவரும் மரணபயத்தில் இருக்கிறார்கள். இப்போது வெறியாட்ட ட்ரெய்லர் ஓட்டிக்கொண்டிருக்கும். ஹிட்லர் மெயின் பிக்சருக்கு வருவதற்குள் இவர்களைக் காப்பாற்றவேண்டும். அதுதான் நியாயம் தர்மம் எல்லாமே.

உடனடியாக இந்த விடயத்தில் மொசாட்டுக்கு உதவுவது என்று தீர்மானித்துவிட்டார் ஃபிரான்சில் ஃபோலி. இதற்கு வசதியாக அவருடைய பாஸ்போர்ட் அதிகாரி வேலை பயன்பட்டது.

அப்போது ஃபிரான்சிஸ் ஃபோலி பெர்லின் நகரத்தில் இருக்கிற பிரிட்டிஷ் தூதரகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தார். அங்கே இங்கிலாந்து பாலஸ் தீனம் செல்வதற்கான விசா கேட்டு ஏகப்பட்ட விண்ணப்பங்கள் வரும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அலங்காரக்...

காலை வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 10 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும்.

தொடர்ந்து 25 தினங்கள் நல்லைக் கந்தனின் மகோற்சவம் இடம்பெறும். (ம-7)

## மேல் மாடி...

நகர் யாழ்.பல்கலைக்கழக விவசாயப் பீட வளாகத்தில் பாதுகாப்புக் கடமையில் இருந்த தர்மசீலன் ரகுராஜ் (வயது-34) என்ற பாதுகாப்புக் காவலரே உயிரிழந்துள்ளார்.

குறித்த பாதுகாவலர் விவசாய பீடத்தின் மேல் மாடியில் இருந்து தவறி விழுந்து மரணம் ஏற்பட்டிருக்கலாம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவருகிறது என்று கிளிநொச்சி மாவட்ட தடயவியல் பொலிஸ் உத்தியோத்தர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## முன்னாள்...

ஓய்வுபெற்ற முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடற்படைப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இருந்தபோது பொத்துஹெரவைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் காணாமல்போன சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## அதிசொகுசு...

வுள்ளது.

இந்தியாவில் இருந்து Cordelia Cruises அதிசொகுசு சுற்றுலாப் பயணிகள் கப்பலானது எதிர் வரும் ஓகஸ்ட் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

குறித்த சுற்றுலாப் பயணிகள் கப்பலானது கடந்த 2023ஆம் ஆண்டு 9 தடவைகள் வந்திருந்தது. அத்துடன் 2024ஆம் ஆண்டு 6 தடவைகள் இலங்கைக்கு வந்திருந்தது.

அதன்பிரகாரம் எதிர்வரும் ஓகஸ்ட் 15 காலை காங்கேசன்துறை முகத்தை வந்தடையும் கப்பலில் வரும் பயணிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள யாழ்ப்பாணம் கோட்டை உள்ளிட்ட சில இடங்களைப் பார்வையிட்ட பின்னர் மீண்டும் இந்தியாவைச் சென்ற டையவுள்ளனர். இந்தக் கப்பலானது மிகவும்பாரிய ஒரு சுற்றுலாப் பயணிகள் கப்பலாகக் காணப்படுகின்றது.(ம-7,104)

## பின்பக்கமாக...

இளைஞனே உயிரிழந்தவராவார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொண்டதில் மரணத்திற்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7,60,104)

## Govpay...

நேரடியாக அபராதம் வசூலிக்கும் முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க இது தொடர்பாக ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று கலந்துகொண்டு இதனைத் தெரிவித்தார்.

இந்த செயல்முறையை வெற்றிகரமாக்குவதற்கு அதிகாரிகளுக்கு தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், நேற்று 1000 போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளுக்கு தொலைபேசிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

டிஜிட்டல் விவகார அமைச்சின் வலுவான அர்ப்பணிப்புக் காரணமாக இந்தச் செயல்முறை மிக விரைவில் தொடங்க முடிந்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார். (ம-7)

## நாமல் ராஜ...

நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குத் தொடர்பான விசாரணைகளுக்காக நீதிமன்றில் ஆஜராகாமல் இருந்தமையினால் அவருக்கு எதிராக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மாலைதீவில் தனியார் நிகழ்வொன்றில் கலந்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவில் தனியார் நிகழ்வொன்றில் கலந்து கொண்டுள்ள நாமல் ராஜபக்ஷ திட்டமிடப்பட்ட விசாரணைக்கு ஆஜராகத் தவறியதையடுத்து, அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றம் இந்தப் பிடியாணை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இதேவேளை அவர் மாலைதீவிலிருந்து இலங்கைக்குத் திரும்புவார் என்றும், மனுவை சமர்ப்பித்து நீதி மன்றத்தில் ஆஜராவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்தோடு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்றுக் காலை தனது உத்தியோக பூர்வ அரச பயணத்திற்காக மாலைதீவுக்குச் சென்ற அதே ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானத்தில் நாமல் ராஜபக்ஷ பயணித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## 3 எலும்...

அகழ்வு நேற்று யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வின்போது புதிதாக 3 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட ஒரு எலும்புக்கூட்டுத்தொகுதி முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அகழ்ந்து எடுக்கப்பட்ட ஒரு எலும்புக்கூட்டுத் தொகுதியுடன் 96 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரையில் 104 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை கடந்த இரு நாட்களில் 08 சான்றுப் பொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இதுவரையான காலப் பகுதியில் 54 சான்றுப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,33)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2025.07.28
சீட்டிழுப்பு இலக்கம் 5904
R 5 8 5 3 5 3
அத சம்பத
R 5 3 5 3
சீட்டிழுப்பு இலக்கம் 479
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.07.28
சீட்டிழுப்பு இலக்கம் 0920
தனுசு 04 13 37 42

தன நிதானய
திகதி - 2025.07.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1934
P 49 77 79 80 P
Double Chance 85514

மெகா பவர்
திகதி 28/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2252
J 26 48 60 68 76

ஜய
திகதி 2025.07.28
சீட்டிழுப்பு இலக்கம் 0172
P 3 8 3 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4146
சீட்டிழுப்பு திகதி 28.07.2025
E 08 53 58 75
E

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.28
சீட்டிழுப்பு இலக்கம் 1213
ரிஷபம் 02 11 26 59 ரிஷபம்
98040 32

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
28.07.2025 வெற்றி வாரம் 0612
N 0 5 4 8 4 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,771,946.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2878
சீட்டிழுப்பு திகதி 2025.07.28 தினம் திங்கட்கிழமை
06 31 36 48 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,610,022,40

சனிதா
திகதி 28.07.2025 வெற்றி வாரம் 5039
02 08 52 60 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,326,429.60

ஜயோதா Jayoda
திகதி 2025.07.28 வெற்றி வாரம் 2147
08 12 22 45 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,694,587.60

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4590
சீட்டிழுப்பு திகதி 28.07.2025 தினம் திங்கட்கிழமை
14 20 31 38 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,442,662.40

லக்பதி
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 06 04 43 53 57
2054
28.07.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.584,778,348.40

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2704
சீட்டிழுப்பு திகதி : 2025.07.28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,408,176.80
18 20 47 75 C


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி ...

ஏற்ப, குறிப்பாக மினசோட்டா நெறி முறைக்கு ஏற்ப நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஆதாரங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களை ஈடுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் விசாரணை முழுவதும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் இந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

செம்மணி மற்றும் மன்னார் போன்ற பிற இடங்களில் முன்னர் தோல்வியுற்ற விசாரணைகளை மேற்கோள் காட்டி மனிதப் புதைகுழிகள் தொடர்பான விடயத்தை முறையாக விசாரிப்பதற்கு ஒரு தேசிய சட்ட மற்றும் நிறுவனக் கட்டமைப்பு இல்லாததை சர்வதேச சட்டவல்லுநர்கள் ஆணைக்குழு விமர்சித்துள்ளது.

காணாமல் போனவர்கள் அலுவலகத்தின் அரசியல்மயமாக்கல் மற்றும் பயனற்ற தன்மை குறித்தும் அந்த ஆணைக்குழு கவலை தெரிவித்து, அதன் சுதந்திரத்தை உறுதிப்படுத்தவும் பாதிக்கப்பட்டவர்களுடன் அர்த்தமுள்ள வகையில் இணைந்து செயற்படவும் அழைப்பு விடுத்துள்ளது.

நீதியை உறுதி செய்வதற்காக சர்வதேச சட்டவல்லுநர்கள் ஆணைக்குழு இலங்கை அரசாங்கத்துக்கு சில பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. அதில்,

•சர்வதேச தடயவியல் மற்றும் மனித உரிமைகள் தரநிலைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும்.

•மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புகளின் சுயாதீன சர்வதேச தடயவியல் நிபுணர்கள் மற்றும் பார்வையாளர்களை ஈடுபடுத்த வேண்டும்.

•பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சட்ட, உளவியல் மற்றும் சமூக பாதுகாப்பு ஆதரவு வழங்கப்பட வேண்டும்.

•எதிர்கால வழக்குகளுக்கான ஆதாரங்களைப் பாதுகாத்து ஆவணப்படுத்த வேண்டும்.

•வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த சட்டத்தை தெளிவான வழிகாட்டுதல்களுடன் முழுமையாக செயற்படுத்த வேண்டும்.

•அரச அதிகாரிகளால் கடுமையான குற்றங்களை விசாரிக்க சுயாதீனமானதொரு அலுவலகம் உருவாக்கப்பட வேண்டும்.

•கடந்தகால மற்றும் தற்போதைய அனைத்து மனிதப் புதைகுழி விசாரணைகளின் முடிவுகளைப் பகிரங்கமாக வெளியிட வேண்டும் எனவும் பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

இதேவேளை சர்வதேச சட்டவல்லுநர்கள் ஆணைக்குழு, ஐக்கிய நாடுகள் சர்வதேச மனித உரிமைகள் பேரவைக்கு சில பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

•எதிர்வரும் செப்ரெம்பர் - ஒக்டோபரில் நடைபெறவிருக்கும் அதன் 60வது கூட்டத்தொடரில் செம்மணி புதைகுழி அகழ்வு போன்ற அண்மைய முன்னேற்றங்களைப் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை மீதான அதன் தீர்மானத்தை புதுப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

•அத்துடன் தொடர்ச்சியான தண்டனை விலக்கு மற்றும் இலங்கையின் சர்வதேச சட்டக் கடமைகளுக்கு இணங்க இலங்கையின் பொறுப்புக்கூறல் திட்டத்திற்கான ஆணைகள் நீடிக்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரைத்துள்ளது.

இதேவேளை செம்மணி விசாரணையை இலங்கை எவ்வாறு கையாளுகிறது என்பது நிலைமாறுகால நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான அதன் உறுதிப்பாட்டின் முக்கிய சோதனையாக இருக்கும் என்று சர்வதேச சட்டவல்லுநர்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு உண்மை, நீதி மற்றும் மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதங்களை அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. (ம-7)

## ஐயக்கொடி கைது

முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

திட்டமிட்ட குற்றக் கும்பல் உறுப்பினரான 'கெஹல்பத்தர பத்மே' தம்மை அச்சுறுத்தியதாக பொய்யான முறைப்பாடொன்றைப் பதிவு செய்தமை தொடர்பான குற்றச்சாட்டிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ம-7)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில், இராமநாதன் வீதியில் ஒரு பரப்பு, 2 குளி காணி விற்பனைக்குண்டு.


- நிலப்பரப்பு
- பரமேஸ்வரா சந்தியில் இருந்து 200m தூரம்
- யாழ்.பல்கலைக்கழகத்திற்கு முன்பாக இராமநாதன் வீதியில்
- ஒரு பரப்பின் விலை மூன்று கோடி ஐம்பது இலட்சம் (3,50,00000.00)
- விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
- தரகர் தேவையில்லை

(4924)

077 288 0152/077 468 3354


# மரண அறிவித்தல்

தோற்றம்
14 - 04 - 1966



மறைவு
27 - 07 - 2025

## சீவரத்தினம் சிவராசா

(உரிமையாளர் - Jena Shoe, Sri Niththin Shoe Mart)

வதிரி பஞ்சுத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் சிவராசா அவர்கள் (27.07.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சீவரத்தினம் - சிறீதேவி தம்பதியரின் அன்பு மகனும் அன்ரனி - மெரிபன் தம்பதியரின் மருமகனும் புஸ்பராணி அவர்களின் அன்புக் கணவரும் ஜெனார்த்தனன் (பிரான்ஸ்), கிருஸ்ணா (பிரான்ஸ்), ஆதித்தன் (அனன்யஸ்ரீ shoe mart), சிவாஸ்கர், ஆதவன் (பிரான்ஸ்), ஸ்ரீஸ்வரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் பொன்னாதன் (ஸ்ரீ shoe palace), ஸ்ரீதரன் (லண்டன்), சியாமளா (Radnum shoe world), கோமளா, சிவநேசன் (ஆசிரியர் - யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), சித்தித்தரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அஞ்சனா (பிரான்ஸ்), விமலியா, மதுசா, தர்சிகா, நிவேதிகா (பிரான்ஸ்), கபிலன் ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரீராணி மஹால்
பஞ்சுத்தோட்டம்
வதிரி

தகவல்:
குடும்பத்தினர்
[illegible]

(1380)


கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3950/-
11-16 Kg 2650/-
21-27 Kg 2470/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

(C-3520)

UK 11Kg - 1400/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2145/- | Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

A/L - 2025
Accounting Seminar

- பாடத்திட்டம் முழுமையாக பூர்த்தியாக்கப்படும்.
- முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களினை உள்ளடக்கிய கையேடு.

ஆரம்பம்:
01.08.2025 மதியம் 2.15 மணி (வெள்ளி)
இடம்:
NEC - யாழ்.நகர்

இலங்கை பூராகவும் Zoom Online ஊடாக வகுப்புக்கள் நடைபெறும்.
04.08.2025 (திங்கள்) இரவு (08.15)
உங்களுக்கான புதிய பதிவுகளினை விரைவாக மேற்கொள்ளலாம். (C-3516)

077 452 0043

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3519)

076 825 7716 (ஆகாஸ்)

# வேலைவாய்ப்புக்கள்

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் பல தரப்பட்ட வேலைவாய்ப்புக்கள்

01.சாரதி
02.தொழில்நுட்ப உத்தியோகத்தர்
03.முகாமைத்துவ உதவியாளர்
04.வரவேற்பாளர்(பெண்)
05.வங்கி உத்தியோகத்தர்

•தகைமை - A/L •வயது - 23-35

(4927)

077 335 3461

# பணியாளர் தேவை

எமது நிறுவனமான உல்லாசப் பயணிகள் விடுதிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் தேவையாக உள்ளது.

- Waiter - (Room Boy) (3 மொழிகளும் தெரிந்தவர் விரும்பத்தக்கது.)
- காவலாளி
- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- சுத்திகரிப்பாளர் (பெண் பணியாளர்களும் விரும்பத்தக்கது)
- Bill Clark (3 மொழிகளும் தெரிந்தவர் - பெண் பணியாளர்களும் விரும்பத்தக்கது)

(C-3518)

இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
[illegible] 601 6310, 077 243 1310


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.